# சிறுவர் இலக்கியம்

(ஓர் இனிய குழந்தையிலக்கியப் பூங்கொத்து)




திரு. அடிகளாசிரியர்

# சிறுவர் இலக்கியம்

(ஓர் இனிய குழந்தையிலக்கியப் பூங்கொத்து)


இயற்றியோர்

**திரு. அடிகளாசிரியர்**

ஒய்வு பெற்ற தமிழ்ப் பேராசிரியர்

சித்தநாதேச்சுராதீனம்

குகையூர் அஞ்சல் – 606 306

விழுப்புரம் மாவட்டம்



பதிப்பாசிரியர்

சோதிடரத்னா

**முனைவர் அ. சிவபெருமான்**

4–சி, வெள்ளிவிழாச் சாலை

செயங்கொண்டசோழபுரம் – 621 802

பெரம்பலூர் மாவட்டம்

# நூல் குறிப்பு


| | |
|---|---|
| பெயர் | சிறுவர் இலக்கியம் (ஓர் இனிய குழந்தையிலக்கியப் பூங்கொத்து) |
| ஆசிரியர் | திரு. அடிகளாசிரியர் |
| பதிப்பு | ஜூலை 2004 |
| அளவு | டிம்மி 1/8 |
| பக்கங்கள் | 10 + 131 = 141 |
| விலை | ரூ 30/- |
| படிகள் | 1200 |
| வெளியீட்டகம் | **திருவருள் நிலைய வெளியீட்டகம்**<br>குகையூர்-அஞ்சல்<br>கல்லக்குறிச்சி-வட்டம்<br>விழுப்புரம் மாவட்டம்-606 306, |
| அச்சகம் | சுபம் பிரிண்டர்ஸ்<br>சுப்பிரமணியம் தெரு<br>சிதம்பரம்-608 001.<br>☏ 232544 |


---

## வேண்டுகோள்


இந்நூலிலுள்ள பாடல்களை அச்சடிக்கவோ, வேறு வகையில் பயன்படுத்தவோ விரும்பினால் நூலாசிரியரின் அனுமதியைப் பெற வேண்டும்.


---

# பதிப்புரை

குழந்தைகளுக்கு எழுதுவது என்பது அரிய பணியாகும். அப்பணியை எல்லோராலும் எளிதில் செய்துவிட இயலாது. தமிழ்நாட்டில், குழந்தைகளுக்காக எளிய நடையில் எழுதுபவர்கள் மிகச்சிலரே உள்ளனர். அச்சிலருள் எனது தந்தையார் பேராசிரியர் திரு. அடிகளாசிரியரும் ஒருவராவர். இவர், நாற்பதாண்டுகளுக்கு முன்பே குழந்தைப்பாடல்களை எழுதியுள்ளார். அப்பாடல்களுல் சிலவற்றை எனது மூத்த சகோதரர் அ. பேராசிரியர் நூலாகவும் (1963) வெளியிட்டுள்ளார். அந்நூலில் இடம் பெறாத பல்வேறு பாடல்களை நான் தேடித் தொகுத்து 1983 இல் நூலாக வெளியிட்டுள்ளேன். மேற்கூறிய இரண்டு நூல்களிலும் இடம் பெறாத பல குழந்தைப் பாடல்கள் தந்தையாரின் குறிப்பேடுகளில் எழுதப் பெற்றிருந்தன. அக் குறிப்பேடுகளில் எழுதப்பெற்றிருந்த குழந்தைப் பாடல்களைத் தேடித் தொகுத்து அவற்றுடன் முன்பு வெளியிட்ட பாடல்களையும் சேர்த்து 2003 ஆம் ஆண்டில் நூலாகப் பதிப்பித்தேன். அதன் பின்னர் பல பாடல்கள் கிடைத்தன. அவற்றுடன் முன்பு வெளியிட்ட பாடல்களையும் சேர்த்து ஒன்றாக்கி 108 பாடல் களுடன் இந் நூலைப் (2004) பதிப்பித்துள்ளேன். இந்நூல் அச்சேறிய பின்பும் எனது தந்தையார் பல குழந்தைப் பாடல்களைப் புதியதாக இயற்றியுள்ளார். எதிர்காலத்தில் வாய்ப்பு அமையின் அவற்றையும் நூலாக்குவேன்.

இந்நூல் பதிப்பில் குறையிருப்பின் என்னைச் சாரும்; நிறை இருப்பின் தந்தையாரைச் சாரும், வாழ்நாள் வரையில் தமிழ்த் தொண்டாற்ற வேண்டும் என்ற குறிக்கோளில் இந் நூலைப் பதிப்பித்து வழங்கியுள்ளேன்.

இந்நூல் உருவாக உதவிய அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இங்ஙன்

20—7—2004

**அ. சிவபெருமான்**

# இயற்றியோர் முன்னுரை

நானும் என் நண்பரும் பேசிக் கொண்டிருந்தோம். அப்பொழுது என் நண்பரைப் பார்க்க புதிய அன்பர் ஒருவர் வந்தார். அவர் என் நண்பரைப் பார்த்து உங்களுக்கு எத்தனைக் குழந்தைகள் இருக்கின்றனர்? அவர்களின் கல்விநிலை என்னவென்று வினவினார். அதற்கு என்நண்பர், பெரியவன் கல்லூரியில் படிக்கின்றான்; அதற்கு அடுத்தவன் பன்னிரண்டாம் வகுப்பு படிக்கின்றான்; அதற்கு அடுத்தவன் தொடக்கப் பள்ளியில் படிக்கின்றான்; அதற்கு அடுத்தவன் அதற்கு அடுத்தவன் தாயைச்சுற்றித்திரிகின்றான் என்றார். இதனைக் கேட்டதும் குழந்தை என்கின்ற சொல் பொதுவாக நான்கு நிலையில் உள்ளவர்களையும் குறிப்பதை அறிந்து கொண்டேன்.

யான் இயற்றிய சிறுவர் இலக்கியம் இன்னவயதுடைய குழந்தைகளை மட்டும் குறிக்காமல், பல நிலையிலுள்ள குழந்தைகளை குறிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதாவது நான்கு நிலைகளைக் குறிக்கும் வண்ணம் எனது பாடல்கள் அமைந்துள்ளன.

நூல் உருவான வரலாறு

யான் 1953 ஆம் ஆண்டில் குழந்தையிலக்கியம் என்ற நூலை எழுதினேன். அந்நூலை எனது மூத்தமகன் அ. பேராசிரியன் பதிப்பித்தார். அதன்பின்னர் 1963 ஆம் ஆண்டில் பல்சுவைப் பண்ணத்திப்பாடல்கள் என்ற தலைப்பில் குழந்தையிலக்கிய நூல் ஒன்றை எழுதினேன். அந்நூலை எனது இளையமகன் அ. சிவபெருமான் பதிப்பித்தார். இவரே 2003

ஆண்டில் யான் எழுதிய குழந்தையிலக்கியப் பாடல்களைத் (102) தொகுத்துப் பதிப்பித்தார். தற்போது மேற்கூறிய மூன்று பதிப்புப் பாடல்களையும் ஒன்றாக்கி மேலும் பல பாடல்களைச் சேர்த்து 108 பாடல்களுடன் சிறுவர் இலக்கியம் என்ற இந் நூலைப் பதிப்பித்து வழங்கியுள்ளார்.

யான், பல ஆண்டுகளாக ஆங்காங்கே எழுதி வைத்திருந்த குழந்தைப்பாடல்களைத் தேடித் தொகுத்து, ஒழுங்கு செய்து தலைப்பிட்டு பெருநூலாக ஆக்கியவர் எனது இளையமகன் அ. சிவபெருமான் ஆவார். இவரின் பெரும் முயற்சியால் தான் இந்நூல் அச்சாகி வெளிவந்துள்ளது.

நான் மிகவும் முதுமை யடைந்துள்ளேன் (95 அகவை). முதுமையுடன் நரம்பு வலுவிழந்த நோயும் ஏற்பட்டுள்ளது. அதனால் பிறரின் உதவியோடு தான் இந்நூலை அச்சிட வேண்டிய நிலை உண்டாயிற்று. இவ்வகையில் எங்கள் ஊரைச் சேர்ந்த திரு. சி. முருகன் இடைப்பாடியைச் சேர்ந்த அ. கணேசன் என்பவர்களும் எனது பெயர்த்தி. பே. பாமினி, ந. கவிதா ஆகியோரும் இவ்வெழுத்துப் பணிக்கு உதவினர்

நூல் வெளியிட கிடைத்த நிதி

காஞ்சி காமகோடி பீடாதீபதியாகிய தவத்திரு ஜெயேந்திர சர்சுவதி சுவாமிகள், எனது சைவப் பணியைப் பாராட்டிக் கௌரவித்து எனக்குப் பத்தாயிரம் ரூபாய் பொற்கிழி வழங்கிச் சிறப்பித்தார்கள் (18-1-2004). தவத்திரு சுவாமிகள் வழங்கிய அத்தொகையை எனது குடும்பச் செலவுகளுக்கு வைத்துக் கொள்ளாமல் தமிழுக்கே செலவிட எண்ணினேன். அதலால் அத்தொகையை அடியாக வைத்துக் கொண்டு இந்நூலை அச்சிடும் பணியைத் துவங்கச் செய்தேன். எனது மூத்தமருமகன் பே. தில்லைச் செல்வி பேராசிரியரும் இந்நூல் அச்சிட ரூபாய் ஆயிரம் உதவினார்கள். தாரமங்கலத்தில் வாழ்ந்து வரும்

எங்கள் ஆதீனச் சீடராகிய குரு, சு. பூபதி ராஜன் அவர்கள் குரு காணிக்கையாகிய ருபாய் இரண்டாயிரம் வழங்கினார். மேலே கூறிய அவர்கள் வழங்கிய அத்தொகைகளை வைத்துக்கொண்டு இந்நூலை அச்சிட்டு வழங்கியுள்ளேன்.

**அச்சகப் பணி**

வழக்கம் போல் என்னுடைய நூல்களைப் பதிப்பாசிரியராக அமர்ந்து பதிப்பித்து வரும் எனது இளையமகன் அ. சிவபெருமான் அச்சகம் சென்று மெய்ப்பு, அட்டை முதலான வற்றை ஒழுங்கு செய்து தம் கடின உழைப்பால் இந்நூலைப் பதிப்பித்து வழங்கியுள்ளார். சிதம்பரம் சுபம் அச்சக உரிமையாளர்களாகிய திரு. கோ. தட்சிணாமூர்த்தியும், திரு. மா. குருசாமியும் நல்லமுறையில் அச்சிட்டு வழங்கி யுள்ளனர். இவ்வாறு நூல் உருவாக்கத்திற்கு உதவிய மேற்கூறிய அனைவரையும் நன்றாக வாழ்த்தி எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முதுமையான வயதில் நரம்புநோயால் பாதிக்கப் பெற்றுப் பல ஆண்டுகளாக வீட்டிலேயே தங்கியுள்ள என்னை எங்கள் ஆதீனச் சீடர்கள் புரவலர்களாக இருந்து புரந்து வருகின்றனர். அவர்கள் என்னைப் புரப்பதாலும் என் குடும்பத்தினர் என்னைக் காப்பதாலும் நான் தமிழையும் ஆன்மீகத்தையும் புரந்து வருகின்றேன். இது இறைவன் திருவருளே.

இங்ஙன்

15-7-04 **திரு. அடிகளாசிரியன்**

# பொருளடக்கம்

பதிப்புரை

இயற்றியோர் முன்னுரை

சிறுவர் இலக்கியப் பாடல்களின் தலைப்பும் பக்கங்களும்

1. கடவுள் வாழ்த்து 2
2. இரண்டு கடவுள் பிள்ளைகள் 3
3. குழந்தை முருகன் 4 — 6
4. நல்ல பாட்டு 7
5. குழந்தைப் பாட்டுகள் எப்படி இருக்க வேண்டும்? 8
6. ஞாயிறு 9
7. எங்கள் வீட்டுத் தாமரை 10
8. குண்டு நிலா 11 — 12
9. வட்டமான வெண்ணிலா 13 — 14
10. நிலா 15
11. ஆரோ எறிந்த வெண் பந்து 16
12. அழுக்குப் பிடிச்ச தேய்ந்த காசு 17
13. இளைச்சுப் போன நிலா 18
14. சின்ன சின்ன நிலாவே 19 — 20
15. வான மீன்கள் 21
16. தமிழ் வாழ்த்து 22 — 23
17. தமிழைக் கற்பாய் 24
18. நல்ல தமிழ்நாடு 25
19. தமிழ்ப் பாட்டைத் தாளம் போட்டுப் பாடு 26
20. குழந்தை வாயில் சிரிப்பு 26
21. அறிவுக் கடவுள் 27
22. நல்ல தம்பி 28 — 29

| | | |
|---|---|---|
| 23. | பள்ளிக் கூடச் சிறுவர் | 30 |
| 24. | மாணவர்க்கு | 31 |
| 25. | ஏழை மாணவர் | 32 |
| 26. | நமது பாட சாலைகள் | 32 |
| 27. | துயிலெடை | 33 |
| 28. | நான் காத்தேன் | 34 |
| 29. | சின்னதம்பிக் கொண்டாட்டம் | 35 |
| 30. | எங்கள் பையன் நல்ல பையன் | 36 — 37 |
| 31. | காலைக் கடன் | 38 — 39 |
| 32. | இன்பக் கடல் | 40 |
| 33. | சின்ன தம்பி | 41 |
| 34. | எது வேண்டும்? | 42 — 43 |
| 35. | தாத்தா சாமார்த்தியம் | 44 |
| 36. | தாத்தாவும் பேரனும் | 45 |
| 37. | பாட்டியும் பேரனும் | 46 |
| 38. | விசுவு என்னும் குழந்தை | 47 |
| 39. | குறும்புக்காரக் குப்பன் | 48 |
| 40. | முல்லைப்பூ | 49 |
| 41. | எங்கள் நல்ல வீடு | 50 — 51 |
| 42. | நான் என்ற சிறுவனும் பாப்பு என்கின்ற குழந்தையும் | 52 |
| 43. | வறுமைக் குழந்தை | 53 |
| 44. | சின்னப் பாப்பினை வினவுதலும் அது கூறும் விடையும் | 54 |
| 45. | சின்ன குழந்தை மனம் | 55 — 56 |
| 46. | குழந்தைச் சிரிப்பு | 57 |
| 47. | உறவு வேண்டுமா சண்டை வேண்டுமா | 58 |
| 48. | ஒன்றை ஒன்றாய்க் கருதும் குழந்தை உலகம் | 59 |
| 49. | நல்ல குழந்தை | 60 |
| 50. | சாப்பிடம்மா | 61 |

51. நாலு முடர் வந்த போது நன்மை என்ன நடைபெறும்? 62
52. கல்வியும் காமமும் 63
53. முதல் தொண்டு 64
54. நல்ல தொழிலைச் செய்திடுவோம் 65
55. பட்டம் 66
56. நானும் நீயும் ஒன்று 67
57. என்றைக்கும் வேண்டுவது 68
58. நேசம் நெஞ்சில் வேண்டும் 68
59. உண்மை கற்ற மனிதர் 69
60. தீபாவளி 70 — 71
61. சிரிச்சி விளையாடு 72
62. ஓடி விளையாடு 73
63. விளையாடுமிடத்தில் மாணவரின் திறந்த மகிழ்ச்சி உள்ளம் 74
64. ஆடலும் பாடலும் 74
65. மின்னுகின்ற மீன் 75
66. நல்ல வெல்லம் 76 — 77
67. நல்ல குளம் 78
68. குண்டு குண்டு பூனையார் 79
69. வெள்ளை நிறப் பூனை 80
70. சின்ன தம்பி 81
71. சிட்டும், சிட்டுப் போன்ற குழந்தையும் 82
72. கடமையறிந்த நாய்க்குட்டி 83
73. நாகரிகக் காகம் 84
74. வீட்டுத் தோழன் 84
75. எருமை 85
76. கோயில் யானை 86
77. அணிற் பிள்ளை 87
78. ரயில் 88
79. முல்லையும் வண்டும் 89

| | | |
|---|---|---|
| 80. | வண்டு | 89 |
| 81. | கண்ணாடி | 90 |
| 82. | பூ...பூ...பூ... | 91 |
| 83. | அறுகம்புல் | 92 |
| 84. | மாப்பிள்ளை விட்ட எலி | 93 — 94 |
| 85. | புரட்சி | 95 |
| 86. | அவ்வை | 96 |
| 87. | கருணைத் தொண்டு | 97 |
| 88. | குழந்தைப் பாட்டின் வாழ்த்து | 98 |
| 89. | குழந்தையின் பாட்டோவியம் | 98 |
| 90. | விளையாடுபவரை உடன் பிறந்தோராகக்கருதுக | 99 |
| 91. | சிறந்த விளக்கு | 100 |
| 92. | ஆற்றங்கரை | 101 |
| 93. | பூங்கொத்து | 102 |
| 94. | கறுப்புக் காக்கையை வெறுக்காதே | 103 |
| 95. | குழந்தையிலக்கியப் பாட்டின் இயல்பு | 104 |
| 96. | அம்மாக் கடமை | 105 |
| 97. | பூவும் வண்டும் | 106 |
| 98. | சின்னக் குழந்தை முகம் | 107 |
| 99. | வாழ்க்கை | 108 — 109 |
| 100. | இன்பம் தரும் பொருட்கள் | 110 |
| 101. | நத்தை | 111 |
| 102. | கண்ணன் | 112 |
| 103. | நல்ல நண்பர் | 113 — 115 |
| 104. | குரங்கண்ணா | 116 |
| 105. | பட்டிக்காட்டைப் பார்க்கப் போகிறோம் | 117 — 118 |
| 106. | பாட்டியம்மா | 119 |
| 107. | குட்டிக் குரங்குக் கல்யாணம் | 120 — 121 |
| 108. | சிறந்த பண்புகள் | 122 |
| | பேராசிரியார் திரு. அடிகளாசிரியரின் வாழ்வும் பணிவும் | 123 — 131 |

உ

இறைவன் துணை

## பேராசிரியர் திரு. அடிகளாசிரியர்

இயற்றிய

# சிறுவர் இலக்கியம்

மத்தியந்தனர் என்று ஒரு முனிவர் இருந்தார். அவர் மகன் வியாக்கிரம பாதர் ஆவர். மகன் தந்தையை நோக்கி தவத்தில் பெரியது எது? என்று வினாவினார். தந்தை கடவுள் வழிபாடுதான் என்றார். கேட்ட மகன் கடவுள் எங்கே இருக்கின்றார் என்று வினாவினார். தந்தை பார்முழுதும் கடவுள் சந்நிதியே, அவ்வாறு கருதாமல் வேறுபாடாகக் கருதினால் அது அவர்களுடைய தவக்குறைவே ஆகும் என்றார்.

இந்த உறுதிமொழியால் கடவுளை, குறிப்பிட்ட ஒரு வடிவத்தில் வைத்தும், குறிப்பிட்ட ஒரு இடத்தில் வைத்தும் வழிபாடு செய்யாமல் அவர் அங்கு இங்கு எனாதபடி எங்கும் நிறைந்துள்ளார் என்று கொள்வதே பேரறிஞரின் முடிந்த கருத்தாகும்.

அக்கருத்தை முதலாக வைத்துக் கொண்டு இச் சிறுவர் இலக்கியத்திற்குக் கடவுள் வாழ்த்து இயற்றப்பட்டுள்ளது.

# 1. கடவுள் வாழ்த்து

## (பொது)

1. எங்கும் கடவுள் இருக்கிறது;
இதனால் உலகம் நடக்கிறது
அங்கும் இங்கும் அதைத்தேடி
அலைந்து நானும் திரிவதில்லை.

2. அதிகா லையிலே எழுந்திடுவேன்
அகத்தில் அன்பாய் நினைந்திடுவேன்
துதிகள் பலவும் பாடிடுவேன்;
தூய மனத்தைப் பெற்றிடுவேன்.

3. ஆண்டவன் தன்னை வழிபட்டால்
அன்பும் அறிவும் உண்டாகும்
அன்பும் அறிவும் உண்டானால்
அருளும் பொருளும் உண்டாகும்.

4. அருளும் பொருளும் உண்டானால்
அவனிக் கெல்லாம் நலஞ்செயலாம்
அவனிக் கெல்லாம் நலம்செயவே
ஆண்டவன் தன்னைப் பணிகின்றேன்.

# 2. இரண்டு கடவுள் பிள்ளைகள்

1. சின்ன பிள்ளை பெரிய பிள்ளை
சிவனா ருக்கே சிறந்த பிள்ளை
அண்ணன் தம்பி இருவர் தம்மை
அகத்தில் வைத்தே பணிதல் செய்வாம்.

2. தம்பிக்கு உதவி செய்யும் பிள்ளை
தந்தை தாயை வணங்கும் பிள்ளை
தும்பிக் கையைப் பெற்ற பிள்ளை
துயரம் தீர்க்கும் பெரிய பிள்ளை.

3. கலைகள் பலவும் கற்ற பிள்ளை
கையில் வேலை பெற்ற பிள்ளை
அலையும் மலையும் படையும் வரினும்
அச்சம் அறியாச் சின்னப் பிள்ளை.

# 3. குழந்தை முருகன்

1. பொய்கை மலர்மேலே — அன்று
பூத்த திருமுருகா! — உன்றன்
தெய்வ இளமையினை — எவர்
தெரிந்து புகழ்ந்திடுவார்?

2. முல்லைக் குமுதமலர் — இள
மூரலும் வாய்களுமே — நல்ல
சொல்லை அருளுமலர் — அருட்
சோதி முகமலரே.

3. கண்ணும் கருமணியும் — என்னைக்
காண இழுக்கும்மலர் — வல்ல
வண்ணத் திருக்கைமலர் — என்னை
வாவென்ற செம்மலரே.

4. எண்ணத்தில் வாழ்ந்திருக்கும் — உன்றன்
இரண்டு திருவடிகள் — இந்த
மண்ணுக்கு வாழ்வளிக்கும் — நல்ல
மழையென்னும் அடிமலர்கள்.

5. தெய்வ மலர்நிறைந்த — ஒரு
தீந்தமிழ்ப் பூஞ்செடிபோல் — புதுப்
பொய்கை மலர்மேலே — அன்று
பூத்த திருமுருகா!

6. உலகப் பொருள்எவற்றும் — முருகா நீ
ஒளிபெற்று வாழ்ந்திடினும்
இலகும் இளைஞரிடம் — முருகா
என்றும் இருப்பாயே.

7. எல்லா இளைஞர்களும் — நாம்
ஏத்தும் இளமுருகர் — அவர்
நல்லார் எனவாழின் — இந்த
நானிலம் வாழ்ந்திடுமே.

8. பாலும் தயிருமுண்டு — உயர்
பட்டுடை தானணிந்த — குழக்
கோலச் சிறுவரிடம் — நீயும்
கூடி யிருந்திடினும்.

9. கூழும் பெறாமையினால் — உளங்
குன்றி இரங்குகின்ற — இளம்
ஏழைச் சிறுவரிடம் — முருகா!
என்றும் இருப்பாயே.

10. ஏழைச் சிறுவரெலாம் — நாம்
ஏத்தும் இளமுருகன் — அவர்
வாழ உணவளித்தால் — முருகன்
வந்து மகிழ்ந்திடுமே.

11. கந்தையைப் போக்கிஅவர் — இடையில்
கட்ட உடையளிக்கில் — நம்தம்
சொந்த முருகனுக்கே — பட்டுச்
சோடி கொடுத்ததுவாம்.

12. ஏழைச் சிறுவருக்கே — கல்வி
ஏற்றம் அளித்திடிலோ — குருக்
கோழி முருகனுக்கே — உளத்தில்
கோடி மகிழ்ச்சிவரும்.

13. நாட்டின் குழந்தையெலாம் — நமக்கு
நல்ல முருகர்களாம் — அவர்
வாட்டம் உறாதபடி — என்றும்
வாழ்ந்திடச் செய்திடுவோம்.

—※—

குறிப்பு: மேற்கண்ட பாட்டில் பொய்கை என்றது கங்கைக் கரையிலுள்ள சரவணப் பொய்கையைக் குறிக்கும்.

# 4. நல்ல பாட்டு

(பாவலன் கூற்று) சுவை: பெருமிதம்

1. நல்ல பாட்டைப் பாடணும்
நாட்டை வாழ வைக்கணும்
கல்லைப் போன்ற நெஞ்செலாம்
காதில் கேட்டுக் கரையணும்.

2. வெல்லம் போல இனிக்கலாம்
வேம்பைப் போலக் கசக்கலாம்
நல்ல கருத்தை உணர்த்தணும்
நாட்டைத் திருத்த முயலணும்.

3. ஏட்டில் வழங்கும் சொற்களால்
எழுதும் பாடல் சிலருக்கே
நாட்டில் வழங்கும் சொற்களால்
நாமும் பாடில் பலருக்காம்.

4. சின்ன நல்ல சொற்களைச்
சேர்த்துத் தொடர்க ளாக்கியே
பொன்னைப் போன்ற கருத்தெலாம்
பொருத்தி விளங்கப் பாடணும்.

5. கண்ணைக் கவரும் அழகுடன்
காலை மலரும் பூக்கள்போல்
எண்ணந் தன்னை இழுத்திடும்
இனிய பாட்டை எழுதணும்.

# 5. குழந்தைப் பாட்டுகள் எப்படி இருக்க வேண்டும்?

1. சின்ன சின்ன பாடலாம்
சிறுகு ழந்தைப் பாடலாம்
தின்னு கின்ற வெல்லம்போலத்
தித்திக் கின்ற பாடலாம்.

2. சிறுவர் நெஞ்சை அள்ளுகின்ற
சிறந்த பொருள்கள் இருக்குமாம்
நறும ணங்கள் வீசுகின்ற
நல்ல பூவில் சிறக்குமாம்.

3. குதிச்சுக் குதிச்சுக் குழந்தைக்கூட்டம்
கொம்மா ளங்கள் போடுமாம்
பதிச்சுக் கொள்ளும் கருத்தையுணர்ந்து
பாடிப் பாடி மகிழுமாம்.

4. பழக்கமான நல்ல சொல்லில்
பாடப் பட்ட பாடலாம்
வழக்கமான பாலைப் போல
வாயிற்கு இனிய பாடலாம்.

## 6. ஞாயிறு

1. சிவந்த உதய ஞாயிறு
சிறப்பைக் கொடுக்கும் ஞாயிறு
உவந்த உலகில் ஒளியினால்
ஊக்கம் கொடுக்கும் ஞாயிறு.

2. செக்கர் வானம் செய்திடும்
சிறந்த அரும்பை மலர்த்திடும்
மக்கள் விழியைத் திறந்திடும்
மண்ணில் இருளைத் துரத்திடும்

3. தொழிலைச் செய்யத் தூண்டிடும்
தொழிலுக்கு உதவி செய்திடும்
எழுந்தும் மறைந்தும் ஒருநாளை
இரண்டு கூறு செய்திடும்.

# 7. எங்கள் வீட்டுத் தாமரை

(பெரியதம்பி கூறுவது)

1. காக்கா எழுந்து கத்திச்சுக்
கண்ணை விழிச்சுப் படுத்திருந்தேன்;
கோழி வந்து கூவினதும்
குதிச்சு நானும் எழுந்துட்டேன்.

2. சிட்டுக் குருவி விடியலிலே
சேர்ந்து மாறிப் பாடிச்சு;
பட்டுப் போலே செவ்வானம்
பரவி அழகாய் நின்றதுவே.

3. பொன்னை உருக்கி நீராக்கிப்
பூமியில் எங்கும் பொழிவதைப்போல்
என்னை மயக்கிச் சூரியனும்
எங்கும் தங்கத் தொளிசெய்தான்.

4. செடியுங் கொடியும் மலர்ந்தனவே
சிறுசிறு வண்டுகள் எழுந்தனவே
நொடியில் தேனை உண்டனவே
நோக்கிப் பாடி ஆடினவே.

5. தங்கப் பாப்பா எழுந்திருச்சுத்
தலைநீட் டிச்சுச் சூரியன்முன்
எங்கள் வீட்டுத் தாமரையும்
எதிர்கொள் வதுபோல் தோன்றிற்றே.

6. காலை அழகை என்சொல்வேன்!
கண்டார்க் கன்றோ அதுதெரியும்
சேலைப் போர்த்திக் குறட்டையிடுஞ்
சிறுவர்க்கு அதுதான் தெரியாதே.

## 8. குண்டு நிலா

(குழந்தைக் கூட்டம் கூறுவது)

1. வெள்ளை நிலா வந்தது
வெளிச்சம் போட்டு நின்றது
கள்ளமிலாக் குழந்தைக் கூட்டம்
கையை நீட்டி அழைச்சது.

2. குண்டு குண்டு நிலாவே!
கூட வந்து குலாவே
கண்டு கண்டு மதிப்போம்
கையைத் தட்டிக் குதிப்போம்.

3. பந்தைப்போல நினைச்சிடோம்
பார்த்துக் கையால் அடிச்சிடோம்
எந்தத் தீங்கும் செய்திடோம்
எதிர்த்து உன்னை வைதிடோம்.

4. எந்தத் தெருவில் ஆடினாய்?
இந்த அழுக்கைக் கூடினாய்?
சொந்த மாகக் கருதுவோம்
சோப்புப் போட்டுக் கழுவுவோம்.

5. அம்மா உனக்கு இல்லையா?
அழுக்கைப் போக்க வில்லையா?
சும்மா எங்கே திரியுறே?
சோறு எங்கே உண்கிறே?

6. வெள்ளைக் காரத் துரையைப்போலே
வெண்ணெய் ரொட்டி திண்ணியா?
கொள்ளைப் பாலைக் குடிச்சிவிட்டுக்
குண்டு போல நிண்ணியா?

7. குதிச்சுக் கிதிச்சு ஓடியாடு
குண்டு உடம்பு கரையுமே;
கதிச்சுப் பெருத்த ஆமைப்போலக்
கவலை கொண்டு நகர்கிறாய்.

# 9. வட்டமான வெண்ணிலா

கண்டோர் கூற்று சுவை : மருட்கை

1. வட்ட மான வெண்ணிலா
வானில் வந்து நின்றது
குட்டிப் பூனை பாலென்றெண்ணிக்
குதித்து நக்கப் பார்த்தது.

2. வறிய சிறிய குழந்தைகள்
வந்து வானை நோக்கின
சிறிய தோசை என்றுகருதிச்
சிரித்துக் கையை நீட்டின.

3. செல்வர் வீட்டுக் குழந்தைகள்
சின்ன வெள்ளிக் குடையிது
சொல்லு கின்ற பணத்தைத்தந்து
சுருக்கில் வாங்கும் என்றன.

4. கற்றி லாத மாணவர்
கலைநி றைந்த மதியினை
உற்ற தேர்வில் குண்டென்றெண்ணி
ஓடி வீட்டுள் மறைந்தனர்.

5 கண்ணன் மதியைக் கண்டனன்;
கட்டி வெண்ணெய் என்றனன்;
விண்ணி லுள்ள வெண்ணெய்க்கட்டி
வேண்டும் என்று கத்தினான்.

6. தங்கப் பாப்பு கண்டது;
தலையில் அணியும் பூவிது
இங்கு கொண்டு வந்துகொடுங்கள்
எனக்கு வேண்டும் என்றது.

7. நல்ல தம்பி கண்டனன்
நாட்டிற்கு ஏற்றும் விளக்கிது
சொல்லு கின்ற சுயநலத்தால்
சூழ்ந்து நின்று விரும்புறீர்.

8. நாட்டிற்கு உதவும் பொருளினை
நமது நன்மை கருதியே
வீட்டிற் கொணர்ந்து வைத்திடில்
வெறுக்கத் தக்கது என்றனன்,

# 10. நிலா

1. வட்டி போன்ற நிலாவே
வானில் எங்கே போகிறாய்?
குட்டி நாயி குரைச்சுதென்று
குன்றை நோக்கிப் போறியா?

2. குன்றில் கரடி உறுமினால்
குதிச்சுச் செல்லும் இட்மெது?
கன்றும் பசுவும் களித்திருக்கும்
காட்டை நோக்கிப் போவியா?

3. காட்டில் நரிகள் ஊளையிடின்
கடலை நோக்கிச் செல்வையா?
கடலும் உன்னைக் கண்டவுடன்
கத்திக் கத்திக் குமுறுமே.

4. வானத் தின்கண் நிலைத்துவாழின்
வம்பு வந்து சேருமே
வானவெளி ராக்கெட் எல்லாம்
வந்து வந்து மோதுமே.

5. அமைதி யான நல்லிடத்தை
அடைந்து கொள்ள முயன்றிடு
ஆற்றங்கரை எங்கள் வீடு
அமைதி வாழ்வைத் தந்திடும்.

# 11. ஆரோ எறிந்த வெண்பந்து

அண்ணா! அண்ணா! இங்கே வா!
ஆகா யத்தில் அங்கே பார்
காணா போன பந்திற்குக்
கவலைப் பட்டு நின்றாயே
ஆரோ எறிந்த வெண்பந்து
ஆகா யத்தே நிற்குதுபார்
ஏனோ எவரும் தேடவில்லை
எடுத்து வைப்போம் நம்வீட்டில்
உரிய பையன் தேடிவந்தால்
உன்னைக் கேட்டுக் கொடுத்திடுவேன்.
(அண்ணா)

# 12. அழுக்குப் பிடிச்ச தேய்ந்த காசு

(மகனும், தந்தையும் உறழ்வு)

சுவை : அழுகை; மருட்கையுமாம்

1. அப்பா! அப்பா! பசங்க ளெல்லாம்
அழகாப் பட்டம் விடுகின்றார்
இப்போ எனக்குப் பட்டம் வாங்க
எடுத்துக் காசு தந்திடனும்.

2. பெட்டிக் குள்ளே துட்டும் இல்லே
வட்டிக் கடன்தான் வாங்கிடணும்
பட்டம் ஒண்ணு எட்டு நாளில்
பார்த்து வாங்கிக் கொடுக்கின்றேன்.

3. வட்ட மான வெள்ளைக் காசு
வானத்தைப் பாரு இருக்கிறதே;
எட்டி நீயும் எடுத்துத் தரணும்
இப்போ பட்டம் வாங்கிடணும்.

4. அழுக்குப் பிடிச்ச தேய்ஞ்ச காசை
ஆர்கொ டுத்தால் வாங்கிடுவார்?
முழுக்க முழுக்க நல்ல காசு
முயன்று தேடித் தருகின்றேன்.

5. இந்தப் பட்டம் உனக்கு வேண்டாம்
இன்றே கிழிஞ்சிப் போகுமே;
எம்மே பட்டம் பீயே பட்டம்
எடுக்க இன்றே எண்ணிக்கொள்.

# 13. இளைச்சுப்போன நிலா

(குழந்தைக் கூட்டம் கூறுவது)

1. மாலைக் காலம் வந்தது;
   மஞ்சள் வெயிலைத் தந்தது;
   பாலை உண்ணக் கண்ணுக்குட்டி
   பசுவ ராமல் நொந்தது.

2, சின்ன பிறை தெரிஞ்சது;
   சிவப்பு வானம் எரிஞ்சது
   மின்னு கின்ற விளக்கைப்போல
   மேலே மீனும் பொரிஞ்சது.

3. குழந்தைக் கூட்டங் கூடிற்று;
   குதித்துக் குதித்து ஆடிற்று;
   இழந்து கண்ட பொருளைப்போலே
   இளைய பிறையைக் கண்டது.

4. இளைச்சுப் போன நிலாவே!
   இங்கே வந்து குலாவே!
   அழைச்சுச் சோறு போடுவோம்
   அக்க ரையாய் நாடுவோம்.

5. மேகம் உன்றன் போர்வையா?
   மீன்கள் உன்றன் கோர்வையா?
   தேக மெல்லாங் கறுத்துப்போச்சுத்
   தினமுந் திரிதல் நேர்மையா?

6. எங்கள் வீட்டில் தங்கிடு;
   எட்டு நாட்கள் ஓய்வெடு;
   தங்கச் சம்பாத் தயிருச்சோறு
   தக்க வலுவைத் தந்திடும்.

# 14. சின்ன சின்ன நிலாவே

(சிறுமி கூற்று) சுவை : உவகை

1. சின்ன சின்ன நிலாவே!
சிறுகு ழந்தை நிலாவே!
அன்னை போலப் போற்றுவேன்;
ஆசை யாகத் தாவிவா.

2. வென்னி குளிப் பாட்டுவேன்;
வெள்ளைச் சட்டை மாட்டுவேன்;
சின்ன முல்லைப் பூவினைச்
சேர்த்துத் தலையில் சூட்டுவேன்.

3. பருப்பும் நெய்யும் கூட்டின
பாங்கு பெற்ற சோற்றினைச்
சிரிப்பை யூட்டி ஊட்டுவேன்
சீக்கி ரம்மாய் ஓடிவா.

4. பாலைப் போன்ற சோற்றிலே
பசுவின் பாலை ஊற்றுவேன்
ஆலைச் சக்கரை கூட்டுவேன்
அள்ளி அள்ளி ஊட்டுவேன்.

5. காணக் காண உன்றன்மேல்
கணக்கில் லாத ஆசையே;
கோணல் வெள்ளை நிலாவே!
குதிச்சு கிட்டே ஓடிவா.

6. நறுவு சான தெருவினிலே
நாமும் வீட்டைக் கட்டுவோம்;
சிறுவர் கூட்டம் வந்திடும்;
சிரிச்சுக் குதிச்சி ஆடுவோம்.

7. நானும் நீயும் கூடுவோம்;
நல்ல பாட்டைப் பாடுவோம்;
தான தய்ய தானவென்று
தாளம் போட்டு ஆடுவோம்.

# 15. வான மீன்கள்

1. வானில் விளங்கும் மீன்களே
வலையில் சிக்கா மீன்களே
ஞானம் தன்னை மண்ணிற்குதவ
விண்ணில் விளங்கும் மீன்களே.

2. இருபத் தேழாய் வானில்விளங்கி
எழிலை செய்யும் மீன்களே
இருபத் தேழில் திங்கள்
நடந்தால் எமக்குக்கிடைக்கும் மாதமே.

3. இருபத் தேழில் ஞாயிறு
நடந்தால் எமக்குக்கிடைக்கும் வருடமே
மாதம் வருடம் என்னுமிரண்டால்
மக்கள் காலம் கணிப்பரே.

4. ஓதும் இரண்டும் காலம்கணிக்க
உதவி செய்யும் கருவியே;
ஆதலாலே வான மீன்கள்
அறிவை நல்கும் கருவியே.

# 16. தமிழ் வாழ்த்து

(புலவன் கூற்று) சுவை : சாந்தம்

1. எங்கள் தமிழே! நீவாழ்க!
எல்லோ ருக்கும் நீவாழ்க;
திங்கள் தனக்கும் ஒளிநல்கும்
தெய்வக் கதிர்போல் நீவாழ்க·

2. அகமும் புறமும் இனிக்கின்றாய்
அன்பினை நாளும் வளர்க்கின்றாய்
முகமும் விழியும் பாவையும்போல்
முதன்மை கொண்ட முத்தமிழே!

3. தந்தை, தாயர் தாமன்றித்
தாத்தா பாட்டியும் பேசிட்டார்,
எந்தம் உளத்திலும் இப்பொழுதும்
இயல்பாய் எழுந்து வளர்கின்றாய்,

4. பெண்ணும் ஆணும் தம்அன்பைப்
பேசி வளர்ப்பதும் உன்னாலே;
அண்ணன் தம்பி எல்லோரும்
ஆர்வம் உரைப்பதும் உன்னாலே.

5. முன்னே பழுத்த கிழப்பழங்கள்;
மொழியும் பழமைக்கும் இடமாவாய்
பின்னே பிறந்த பிஞ்சுகளும்;
பேசும் புதுமைக்கும் இடந்தருவாய்.

6. அரசனும் உன்னால் ஆள்கின்றான்;
ஐயங் கொள்வோன் இரக்கின்றான்
பரவும் புலவன் பாடுகின்றான்;
பாமரன் வாயால் உளறுகின்றான்.

7. எல்லோ ருக்கும் பொதுமொழியே;
எங்கள் இனிய தமிழ்மொழியே
பல்லோ ருக்கும் பயன்படும்நின்
பண்ணைக் கருதிப் பணிகின்றேன்.

# 17. தமிழைக் கற்பாய்

1. தம்பித் தம்பித் தமிழா!
தமிழை நாளும் கற்பாய்!
நம்பி நம்பித் தமிழா!
நாளும் நாளும் கற்பாய்,

2. பழமை உற்ற மொழிகள்
பழுத்து வீழ்ந்து போச்சு
செழுமை உற்ற மொழிகள்
சிறந்து கிளைக்க லாச்சு

3. காலப் போக்கை வெல்லும்
கருவை உடைய தமிழைச்
சால நாட்கள் வேண்டாம்
சடுதி யாகக் கற்பாய்.

4. எழுத்து மிகவும் குறைவு
எளிய இனிய சொற்கள்
பழுத்த சுவைகள் உண்டு
பயன்செய் பொருளும் உண்டு.

5. வாழக் கருதும் நமக்கு
வாழ்வைக் கொடுக்கும் தமிழை
ஆழ மாகக் கற்றால்
அறிவில் உயர்ந்து வாழ்வாய்.

# 18. நல்ல தமிழ்நாடு

(தமிழ்நாட்டுக் குழந்தைகள் கூறுவது)

1. நல்லதமிழ் நாட்டினிலே
நாங்கள் உதித்தோம்;
நாட்டினுக்கு நன்மைசெய
நாங்கள் மதித்தோம்.

2. எல்லோருக்கும் நன்மைகளை
நாங்கள் எண்ணுவோம்;
எவ்வெவர்க்கும் அவைகளையே
நாங்கள் பண்ணுவோம்.

3. செந்தமிழைச் செம்மையுடன்
நாங்கள் பயில்வோம்;
சீர்த்தியான மொழிகளையும்
நாங்கள் நவில்வோம்.

4. எந்தமிழில் கலைவளர
நாங்கள் உழைப்போம்;
இரவுபகல் அவைகளையே
நாங்கள் இழைப்போம்.

## 19. தமிழ்ப்பாட்டைத் தாளம் போட்டுப் பாடு

தாளம் போட்டே ஆடு
தமிழின் பாட்டைப் பாடு
இயலும் இசையும் என்றும்
இனிய நடிப்பும் என்றும்
மூன்று விதமாய் இருக்கும்
முத்தமிழ் என்பது பெயராம்
எல்லாத் தமிழையும் பாட
ஏற்ற தாளம் வேண்டும்
தாளம் போட்டே ஆடு
தமிழின் பாட்டைப் பாடு.

## 20. குழந்தை வாயில் சிரிப்பு

முல்லைக் கொடிதான் பசப்பு
முடியில் பூக்கள் வெளுப்பு
வந்த வண்டு கருப்பு
வாயில் பாடல் இனிப்பு
இனிய பாடலைக் கேட்க
எல்லா குழந்தைக்கும் விருப்பு
கேட்ட குழந்தைக்கு வாயில்
கிடைத்திடும் நல்ல சிரிப்பு.

# 21. அறிவுக் கடவுள்

1. அறிவைக் கொடுக்கும் மெய்க்கடவுள்
ஆசான் வடிவாய் இருக்கிறது.
அறிவைக் கொடுக்கும் அதனுடைய
அருளால் உலகம் வாழ்கிறது.

2. பள்ளிக் கூடம் அதன்கோயில்
பாடம் எல்லாம் அதன்மொழிகள்
துள்ளிக் குதிக்கும் சிறுவரெலாம்
துதிகள் பாடும் நல்தொண்டர்.

3. அறியாத் தொண்டர் பிழைசெய்தால்
அறிவுக் கடவுள் பொறுத்திடனும்
அறிவுக் கடவுள் அருள்இலையேல்
அந்தோ உலகம் இருளடையும்.

4. விரைவே இன்றிச் சினமின்றி
விரும்பி நோக்கி முகமலர்ந்து
உரையால் அறிவைக் கொடுக்கின்ற
உண்மைக் கடவுள் ஆசானே.

---

குறிப்பு: அறிவுக்கடவுள் – ஆசிரியர்

# 22. நல்லதம்பி

(ஆசிரியர் கூறுவது)

1. சுற்றித் திரியும்நல்ல தம்பீ! — நீயும்
சோம்பற் கிடங்கொடாதே தம்பீ!
கற்றுத் தெளியவேணுந் தம்பீ! — கல்வி
கண்கள் உனக்குமிகத் தம்பீ.

2. தெய்வத்தைப் போற்றவேணுந் தம்பீ! — நெஞ்சில்
தீங்கினை எண்ணிடாதே தம்பீ!
செய்வதை எண்ணிச்செய்யின் தம்பீ! — அது
சிறந்து முடியுமடா தம்பீ!

3. அன்பை மனத்தில்வைத்தால் தம்பீ! — அதில்
ஆர்வம் விளையுமடா தம்பீ!
இன்பம் விளையுமடா தம்பீ! — இங்கு
எல்லாரும் நண்பரடா தம்பீ!

4. பொய்யுந் திருட்டும்வேண்டாம் தம்பீ! — அவை
பொல்லாக் கொடுமைதரும் தம்பீ!
மெய்யும் ஒழுக்கமுமே தம்பீ! — இந்த
மேதினிக்கு வேண்டுமடா தம்பீ!

5. இன்சொல் உனக்குவேண்டுந் தம்பீ! — அதை
என்றும் மறந்திடாதே தம்பீ!
வன்சொல் உனக்குவேண்டாந் தம்பீ! — அதை
வையகம் ஏற்றிடாது தம்பீ!

6. கோளினைக் கூறவேண்டாந் தம்பீ! — அது
குற்றம் விளைத்துவிடும் தம்பீ!
தேளினைப் போன்றகடுஞ் சொல்லால் — நீயும்
திட்டுதல் நல்லதல்ல தம்பீ!

7. தேய்த்துக் குளிக்கவேணுந் தம்பீ! — தினம்
தோய்த்த துணியைக்கட்டுத் தம்பீ!
ஏய்த்துப் பிழைத்திடாதே தம்பீ! — அது
என்றைக்குந் தீங்குதரும் தம்பீ!

8. பசித்துப் புசிக்கவேணுந் தம்பீ! — சும்மா
பட்சணம் தின்றிடாதே தம்பீ!
இசித்து வயிற்றுநோயாம் தம்பீ! — பின்னர்
ஏப்பமும் வாந்தியுமாந் தம்பீ!

9. கண்ட இடங்களெலாந் தம்பீ! — நீயும்
காறி உமிழ்ந்திடாதே தம்பீ!
மண்டலம் தூய்மையானால் தம்பீ! — எங்கும்
மக்களுக்கு நோய்வராது தம்பீ!

# 23. பள்ளிக்கூடச் சிறுவர்

(ஆசிரியர் கூறுவது)

1. பள்ளிக் கூடப் பாலர்களே!
படிக்கும் வகையை உணர்வீரே!
ஆசான் பாடம் சொல்லுங்கால்
அங்கே இங்கே பார்க்காதீர்.

2. சொல்லுங் கருத்தைக் கேட்டிடுவீர்;
சுருக்க மாக எழுதிடுவீர்;
எல்லாம் விளங்க வில்லையெனில்
எழுந்து பணிவாய்க் கேட்டிடுவீர்.

3. படித்தும் விளங்காப் பகுதிகளைப்
பலபேர் சேர்ந்து சிந்தியுங்கள்
வடித்துக் கருத்தை மனத்தினிலே
வகையாய் வைக்கப் பயின்றிடுங்கள்.

4. ஒருவர்க்கு ஒருவர் கேட்டிட்டு
உண்மை விடையைக் கூறிடுவீர்;
கூறிய படியே எழுதிடுவீர்;
கூறல் எழுதுதல் குணந்தருமே.

5. வகுப்பின் அறையுள் உட்கார்ந்து;
வம்புந் தும்பும் பேசாதீர்
ஒழுங்கும் அறிவும் உதவுதற்கே
உரிய இடம்நம் வகுப்பறையே.

6. பள்ளித் தோழர் தங்களுடன்
பகையைச் சிறிதுங் கொள்ளாதீர்
தெள்ளத் தெளியக் கற்றோர்க்குத்
தீய பகைவர் எங்குமிலை.

# 24. மாணவர்க்கு

எம்இளை யோரே! எம்இளை யோரே!
இசைதரு கல்வி இனிதினில் கற்க
இளமை பெற்ற எம்இளை யோரே!
ஏழைகள் மிகுந்த இத்தமிழ் நாட்டில்
கல்வி பயிலும் கருவிகள் உடையோர்
மிகச்சிலர் அன்றோ?

அச்சில ருள்ளும் ஆர்வம் கொண்டு
கல்வி பயிலும் கலைக்களம் அதற்குக்
காலம் கடவாது வருவோர் சிலரே
காலம் கடவாது வருவோ ருள்ளும்
ஒவ்வொரு வகுப்பிலும் ஊக்கமொடு இருந்து
கற்போர் சிலரே.

கடமை கருதிக் கற்போ ருள்ளும்
அறிவுச் செல்வம் அடைபவர் சிலரே.
ஆசான் தன்னொடும் மாணவர் தம்மொடும்
அன்பும் நண்பும் கொள்வோர் சிலரே;
பயனில கூறாது படிற்றுரை பகராது
கட்சிகள் வகுத்துக் கலகம் இயற்றாது
சண்டை செய்து மண்டையை உடைக்காது
அமைதியொடு இலங்கி ஆர்வம் கொண்டே
நுணுகி நுணுகிப் பயின்று
வல்லா ராகுதல் வாய்ப்பது சிலர்க்கே.

## 25. ஏழை மாணவர்

(கொண்டவன் கூறுவது)

கந்தற் சட்டையும், கழித்திடு சுவடியும்
கைதனிற் பழஞ்சோறும்,
சொந்தக் கால்களால் நடந்திடு நடையுமே
துணையெனக் கொண்டோராய்
இந்த நாட்டினில் ஏழைமா ணவர்பலர்
இருந்திடத் தினங்கண்டும்
எந்தச் செல்வரும் இரங்கிடார்; அவர்தமக்கு
இம்மியும் உதவாரே.

## 26. நமது பாடசாலைகள்

(கண்டோர் கூறுவது)

1. நந்தவ னத்திற்கு நான்போனேன்
நல்ல மலர்களை நான்பார்த்தேன்
அந்த மலர்களின் நன்மணமும்
அழகுங் காணத் தருங்குணமே.

2. செடியில் ரோஜா மலர்ந்திருக்கு
சினையில் கொன்றை பூத்திருக்கு
கொடியில் முல்லை சிரித்திருக்கு
குளத்தில் தாமரை விரிந்திருக்கு.

3. எங்கே பூக்கள் பூத்தாலும்
எல்லாம் ஒன்றாம் மாலைக்குள்
எங்கே பாலர் தோன்றிடினும்
எல்லாம் ஒன்றாம் சாலைக்குள்.

4. ஏட்டில் சிறந்த பூவாலே
இயற்றப் பட்ட மாலைகள்போல்
நாட்டிற்கு அழகை நல்கிடும்
நமது பாட சாலைகளே.

# 27. துயிலெடை

(தாய் கூறுவது)

1. காக்கை எழுந்தது; காவென்று கரையுது;
காதின்கண் கேட்கலையா?
கோழியுங் கொக்கரக் கோவென்று கூவுது;
குவிந்தகண் திறக்கலையா?
பூக்கள் மலர்ந்தன; பொன்வண்டு பாடின;
பொலிவினைப் பார்க்கலையா?
காலையில் விழித்திடக் கடமையைப் புரிந்திடக்
கற்றுக்கொள் என்குழந்தாய்!

2. உன்னுடை நாய்க்குட்டி உனக்குமுன் விழித்தெழுந்து
ஓடிக் குதிக்குதுபார்;
பொன்னிறச் சூரியன் தன்னொளி சன்னலில்
புகுந்து வருகுதுபார்;
சொன்னசொல் கேட்டிடும் குழந்தையின் கூட்டங்கள்
சூழ்ந்தது தெருவினில் பார்;
சுறுக்கென எழுந்திரு முகத்தினை அலம்பிடு
சோம்பல் அகன்றிடுமே.

—❋—

# 28. நான் காத்தேன்

(தன் மகனைச் சான்றோன் எனக்கேட்டதாய்
மகிழ்ந்து கூறுவது)

1. பாலைமட்டும் நானூட்டி வளர்த்தேனோ?
என்சேய்க்குப் பாலின் மேலாம்
சீலமுள்ள என்மொழியைச் செவியூட்டி
உவப்பூட்டிச் சிறந்த நெஞ்சுள்
காலவரைக் கடவாத செயலூட்டிக்
கடமைதனைக் கரைத்தே யூட்டி,
ஞாலமதை உயர்வாக்கும் ஞானநெறி
தனையூட்டி, நான்காத் தேனே.

# 29. சின்னதம்பிக் கொண்டாட்டம்

(செவிலித்தாய் கூற்று)

சுவை: உவகை

**எடுப்பு**

கொண்டாட்டம் கொண்டாட்டம்
சின்னதம்பிக் கொண்டாட்டம்

**அடிகள்**

1. குட்டி நாயி வாலை யாட்டிக்
குதிச்சி வந்தால் கொண்டாட்டம்
வட்ட மான வெள்ளை நிலா
வானில் வந்தால் கொண்டாட்டம் (கொண்டாட்டம்)

2. ரொட்டிக் காரன் பெட்டி யோடு
ரோட்டில் வந்தால் கொண்டாட்டம்
சொட்டுச் சொட்டா மழைகள் பெய்யில்
சொல்லொ ணாத கொண்டாட்டம் (கொண்டாட்டம்)

3. பட்டுப் போலக் காலை வெய்யில்
பரந்து வந்தால் கொண்டாட்டம்;
பாட்டி யம்மா தூக்கிக் கொண்டு
பவனி வந்தால் கொண்டாட்டம் (கொண்டாட்டம்)

4. இட்டி லிய்யும் சட்டி னிய்யும்
எதிரில் வைத்தால் கொண்டாட்டம்
கட்டி நெய்யைப் போட்டு விட்டால்
கணக்கில் லாத கொண்டாட்டம் (கொண்டாட்டம்)

5. கட்டில் லாமல் குதிச்சுத் திரியும்
கன்றைக் கண்டால் கொண்டாட்டம்
காத்தி ருக்கும் பசங்க ளோடு
கலந்து குதிக்கக் கொண்டாட்டம் (கொண்டாட்டம்)

# 30. எங்கள் பையன் நல்ல பையன்

(தந்தை கூற்று)

சுவை: பெருமிதம்

1. எங்கள் பையன் நல்ல பையன்
இணையி லாத பையனே
தங்கும் நல்ல பண்பு பெற்ற
தங்க மான பையனே.

2. அன்னை முன்பு அழுது குதிச்சு
அதிகத் தீனி வாங்குவான்;
அவற்றை யெல்லாம் சிறுவர்க் கீந்து
அவரை என்றும் தாங்குவான்.

3. இச்சை யான உணவு தம்மை
எடுத்து வைச்சு உண்ணுங்கால்
பிச்சைக் காரன் வந்து நின்றால்
பேச்சில் லாமல் போடுவான்.

4. சிறுவ ரோடு கூடிப் பழகிச்
சிறந்த முறையில் ஆடுவான்;
வறுமை கொண்ட சிறுவர் வந்தால்
வாய்க்குத் தீனி போடுவான்.

5. கற்றுக் கொடுக்கும் அறிஞர் வந்தால்
கையை குவித்து வணங்குவான்.
சற்று நேரம் வீணி லாமல்
சார்ந்து அவரோடு இணங்குவான்.

6. அழகு தோன்ற தேர்வை எழுதி
அதனில் முந்தி நிற்பவன்;
பழகு தற்கு இனிய நூலைப்
பார்த்துப் பார்த்துக் கற்பவன்

7. உண்மை உண்டு; பொறுமை உண்டு;
உறுதி உண்டு; நன்மையில்
திண்மை உண்டு; திறமை உண்டு:
தெளிவும் உண்டு நெஞ்சிலே.

# 31. காலைக் கடன்

(தந்தை கூறுவது)

1. சின்னஞ் சிறுகுழந்தாய்! — அங்கே
சேவல் முழங்குதுபார்!
இன்னம் பெருந்துயிலோ? — இங்கே
ஏகிற்று வல்லிருளே.

2. கண்ணைத் துடைத்திடுவாய் — அதோ
காலைக் கதிரொளிபார்;
மண்ணைப்பொன் னாக்கிக்கொண்டே — ஒளி
மல்கி எழுகின்றதே.

3. வீட்டின் வெளிப்புறம்வா — அந்தப்
பாட்டை வழிச்செல்லுவோம்;
காட்டின் அழகைக்கண்டு — நட
காலில் பலம்வருமே.

4. ஆற்றுக்குச் சென்றிடுவோம் — அங்கே
ஆன மணல்வெளிபார்;
சாற்றும் மரங்களின்பூ — எங்கும்
சார்ந்து மணப்பதைப்பார்.

5. துள்ளிக் குதித்திடுவாய் — உன்றன்
உள்ளம் களிப்படையும்;
வெள்ளைக் குளிர்புனலில் — நாமும்
வீழ்ந்து முழுகிடுவோம்.

6. தெய்வத்தை நீயெண்ணிக்கொள் — உன்றன்
தீவினை தீர்வதற்கே;
செய்வதெல் லாஞ்சிறக்கும் — நல்ல
சேதி யிதுவுனக்கே.

7. காலைக் கடன்முடித்தோம் — கொஞ்சம்
காலை உணவுகொள்வோம்;
நூலைப் படித்திடுவோம்; — என்றும்
நோயின்றி வாழ்ந்திடுவோம்.

# 32. இன்பக்கடல்

(தந்தை கூற்று)

மல்லிகைக் கொடியை மாலையில் பார்த்தேன்;
நல்ல அரும்புகள் பல் போலிருந்தன
சிறிது நேரத்தில் சிரித்தது போல
இதழ்கள் விரிந்தன; எழில்மிகு காட்சி!
பச்சிலை நடுவே பால்போல் மலர்ந்த
மல்லிகை மலரின் மாண்பினைப் பார்த்தேன்.
அடுத்த நொடியில் என்அழகமர் சிறுவன்
சிரித்த முகமும், சிறுமென் னடையும்
அழகின் மேலே அழகினைச் செய்ய
கொஞ்சிய மொழியொடு குறுக வந்தனன்;
மல்லிகைச் சிரிப்பொடு, மைந்தன் சிரிப்பும்,
கொஞ்சும் மொழியும் நெஞ்சம் புகுந்தன;
அதனால்,
கண்ணும் செவியும் களிப்பை அடைய
இன்பக் கடலில் இறங்கி நீந்தினேன்;
அந்த நிலையில் அகல் வானத்தில்
வெள்ளை மதியம் துள்ளி எழுந்து
கொள்ளை நிலாவைக் கொட்டி நின்றது;
தென்றல் என்னும் தீந்தமிழ்க் காற்று
மெல்ல என்னுடம்பை மேவித் தொட்டது;
அந்த இன்பங்களில் அதிகம் எண்ண,
என்றன் குழந்தை என்னைத் தொட்டது;
தொட்ட குழந்தையைத் தூக்கித் தழுவி
இன்பக் கடல்நடு ஏகிமூழ் கினனே.

# 33. சின்ன தம்பி

(அக்காள் கூறுவது)

1. சின்ன சின்ன தம்பியே!
சிறந்த நல்ல தம்பியே!
அன்னை வைத்த வென்னியில்
அழுக்குப் போகக் குளித்திடு.

2. கொக்கின் வெள்ளைப் போலவே
கோடிச் சட்டை போட்டுக்கொள்;
காக்கை கருப்புப் போலவே
கண்ணில் மையை எழுதிக்கொள்;

3. சேவல் சிவப்புக் கொண்டைபோல்
சிவந்த பூவைச் சூடிக்கொள்
ஆவ லாகச் சின்னபையை
அழகுக் கையில் பிடித்துக்கொள்.

4. பள்ளிக் கூடம் போகலாம்
பாடம் அங்குப் படிக்கலாம்
துள்ளிக் குதிச்சி ஆடலாம்
துன்பம் நீங்கப் பாடலாம்.

# 34. எது வேண்டும்?

கூற்று: கற்ற அண்ணனும், கற்குந் தம்பியும்

சுவை: உவகை

1. அன்பு வேண்டுமா? தம்பீ!
அழகு வேண்டுமா?
அன்பைப் பெற்றால் அழகு வரும்
அன்பு வேண்டுமே; அகத்தில்
அன்பு வேண்டுமே.

2. ஊக்கம் வேண்டுமா? தம்பீ!
உடைமை வேண்டுமா?
ஊக்கம் பெற்றால் உடைமை வரும்
ஊக்கம் வேண்டுமே; அகத்தில்
ஊக்கம் வேண்டுமே.

3. கல்வி வேண்டுமா? தம்பீ!
செல்வம் வேண்டுமா?
கல்வி பெற்றால் செல்வம் வரும்
கல்வி வேண்டுமே; மனதில்
கல்வி வேண்டுமே.

4. உண்மை வேண்டுமா? தம்பி!
திண்மை வேண்டுமா?
உண்மை பெற்றால் திண்மை வரும்
உண்மை வேண்டுமே; எனக்கு
உண்மை வேண்டுமே.

## வேறு

5. அன்பும் ஊக்கமும் கல்வியும்
உண்மையும் இருந்தால்
பின்பு தோன்றுவ யாவையும்
நல்லவே தோன்றும்
இன்பம் எய்திட விரும்புவோர்
யாவரும் மனத்தில்
அன்பை ஊக்கத்தைக் கல்வியை
உண்மையை அடைக.

# 35. தாத்தா சாமார்த்தியம்

(இளைஞர் கூற்று)

சுவை: பெருமிதம்

1. தாத்தா! தாத்தா! கதை சொல்லு
தகுதி தோன்றக் கேட்கின்றோம்
சிரிக்கும் கதையைச் சொன்னாலோ
சிரித்து மகிழ்ந்து குதித்திடுவோம்.

2. அறிவுக் கதையை நீ சொன்னால்
அமைதி யாகக் கேட்டிடுவோம்
பக்திக் கதையை நீ கூறின்
பரமன் மேலே அன்பாவோம்.

3. வீரர்க் கதையை கூறிடிலோ
வீரம் கொண்டே எழுந்திடுவோம்;
தேசத் தொண்டர் கதை சொன்னால்
தேசத் தொண்டைச் செய்திடுவோம்.

4. ஏற்ற கதையை நீ சொல்லி
எங்கள் மனத்தைத் திருப்புகிறாய்;
சாற்றும் கதையால் மனம்திருப்பும்
சாமார்த் தியத்தை என்சொல்வோம்?

## 36. தாத்தாவும் பேரனும்

தடியை எடுத்துக் கொடுப்பான் – மேலும்
தண்ணீரை மொண்டும் தருவான்
முடியாத வேலையை எல்லாம்
முடித்துக் கொடுப்பான் பேரன்.

எழுத்தைச் சொல்லித் தருவார் – மேலும்
எண்ணையும் சொல்லிக் கொடுப்பார்
பழுத்த கலைபல சொல்லி – மனத்தை
பக்குவப் படுத்துவார் தாத்தா.

தாத்தா பேரன் உறவு – இந்தத்
தரணியில் உயர்ந்த நண்பாம்
ஆத்தா அன்பைப் போல
அதுவும் சிறந்த பண்பாம்.

# 37. பாட்டியும் பேரனும்

**பேரன்**

பாட்டி பாட்டி தட்டிலே
பழமி ருக்குது பார்த்தியா?
சின்ன பழத்தை எடுத்துக்கோ
பெரிய பழத்தை எனக்குத்தா

**பாட்டி**

சின்ன பையன் நீயடா
சின்ன பழத்தை எடுத்துக்கோ
பெரிய பாட்டி நானடா
பெரிய பழம் எனக்குத்தான்

**பேரன்**

**அப்படியா!**

கூனல் பாட்டிக் கையிலே
கோணக் கோலு இருக்கனும்
ஏனோ நல்ல கோலினை
எடுத்து நடந்து திரியுறே!

# 38. விசுவு என்னும் குழந்தை

(தொண்டன் கூற்று)

1. குளத்துக் கரை நாவல் மரம்
கொத்துக் கொத்தாய்ப் பழுத்தது;
குடுகு டுண்ணுக் குழந்தைக் கூட்டம்
கும்பல் கும்பலாய் எழுந்தது

2. குனிஞ்சி நிமிர்ந்து சுற்றிப் பார்த்துக்
குழந்தைக் கூட்டம் நின்றது;
குரங்கு மச்சான் குலுக்கிக் குலுக்கிக்
கோடிப் பழத்தைத் தந்தது.

3. வேண மட்டும் தின்ற கூட்டம்
வீட்டை நோக்கி நடந்தது;
விசுவு என்னும் குழந்தை மட்டும்
வேண்டும் பழத்தை எடுத்தது.

4. அம்மா ளுக்கும் அக்கா ளுக்கும்
அவற்றைக் கொடுத்துக் களித்தது;
அப்பா ருக்குங் கொடுக்கச் சொல்லி
அறிவிப் பொன்றும் அளித்தது.

5. நாமே தின்று வாழ்ந்து விட்டால்
நாட்டிற்குப் பயன் இல்லையே;
நமது பொருளை பிறர்க்கும் கொடுத்து
நலத்தைப் புரிதல் நன்மையே.

# 39. குறும்புக்காரக் குப்பன்

1. குப்பன் என்னும் சிறுவன்
குறும்பு செய்யும் ஒருவன்;
சுப்பனையும் கூட்டிக் கொண்டுச்
சுற்றிச் சுற்றித் திரிவான்.

2. குண்டு நாய்கள் ரெண்டுகூடி
குதிச்சு விளை யாடின
கண்டு கொண்ட ரெண்டுபேரும்
கல்லை எடுத்து வீசினர்.

3. கோவம் கொண்ட ரெண்டுநாயும்
குரைச்சுத் துரத்தி வந்தன
குறும்பு செய்த ரெண்டுபேரும்
குருடு போல ஓடினர்.

4. பாவம் அங்கே சைக்களொன்று
பரப ரப்பாய் வந்தது
பசங்கள் ரெண்டும் சைக்கள்மேலே
பார்த்தி டாமல் முட்டினர்.

5. சைக்களோட்டி சைக்களோடு
சாய்ந்து கீழே விழுந்திட்டான்
சக்க ரத்தில் ரெண்டுபேரும்
சிக்கி அடி பட்டனர்.

6. குறும்பு செய்த குப்பனுக்குக்
கூலி உடனே வந்தது
கூடச் சேர்ந்த சுப்பனுக்கும்
குறைவு இலாமல் கிடைத்தது.

## 40. முல்லைப் பூ

நந்தவனம் தந்த பூ
நல்லமணம் பெற்ற பூ
அந்தமான முல்லைப் பூ
ஆசைநல்கும் வெள்ளைப் பூ

பல்லைப்போல மலரும் பூ
பச்சைக் கொடியில் பூத்த பூ
நல்லமாலைக் காலப் பூ
நாளும் குழந்தை சூடும் பூ

பூ...பூ புதிய பூ
பூமி எல்லாம் மணக்கும் பூ
ஆ...பூ அழகுப் பூ
அழகுக் குழந்தை சூடும் பூ

# 41. எங்கள் நல்ல வீடு

(தம்பியர் கூற்று)

சுவை: உவகை

1. எங்கள் நல்ல வீட்டினுக்கே
என்றும் முதல்வர் தாய்தந்தை;
எங்கள் அண்ணன் அக்காவும்
எங்கட் குதவும் நற்றுணைவர்.

2. அன்பும் அறிவும் இன்சொல்லும்
அனைவர்க்கு அமைந்த நல்லகுணம்;
இன்பம் அன்றி, எங்களிடம்
என்றும் துன்பம் இருந்ததில்லை.

3. காலைப் பொழுதில் எழுந்திடுவோம்.
கடவுளை எண்ணித் தொழுதிடுவோம்;
வேலை பலவும் செய்திடுவோம்,
வீணே சோம்பித் திரியோமே.

4. படிக்கும் சிறுவர் படித்திடுவார்;
பணிகள் செய்வோர் பணிசெய்வார்
அடித்தே வேலை யிடமாட்டார்;
அன்பே நிறைந்த எம்தந்தை.

5. கடமை புரிவோம் களிப்பாகக்;
காலம் தன்னில் உணவிட்டு
மடமை ஒழிய அறிவுரைகள்
மாதா மகிழ்வாய் வழங்கிடுவாள்.

6. எங்கள் உடம்பும் உடைகளுமே
என்றும் தூய்மை குறைவதில்லை;
எங்கும் அழகாய்க் காட்சிதரும்
எங்கள் சிறிய நல்வீடே.

7. ஒருவர்க்கு ஒருவர் உறவாகி,
உழைத்துப் புசித்து வாழ்வதனால்,
தரையில் எங்கள் சிறுவீடே
தழைத்து வளரும் நல்வீடே.

# 42. நான் என்ற சிறுவனும் பாப்பு என்கின்ற குழந்தையும்

(சிறுவன் கூற்று)

சுவை: அழுகை

1. நாயிக் குட்டியும் கண்ணுக் குட்டியும்
நடுத் தெருவிலே குதிச்சிது;
நானும் பாப்பும் சேர்ந்துக் கிட்டு
நகைச்சி மகிழ்ந்து பார்த்திட்டோம்.

2. பாயும் பசுவு நாயிக் குட்டியைப்
பாய்ந்து வந்து துரத்திச்சி;
பயந்தி டாமல் நாயிக் குட்டியும்
பாய்ந்து விலகிக் குரைச்சிச்சி

3. சிரிச்ச பாப்பு மிகவும் பயந்து
சீறிச் சீறி அழுதுச்சி;
எரிச்ச லுடனே தாயும் வந்து
என்னை அடிச்சித் திட்டிச்சி.

4. பார்த்தி டாமல் கேட்டி டாமல்
பாலர் தம்மை அடிப்பது,
பாவம்! பாவம்! இதனைப் போலப்
பழிப்பு வேறு இல்லையே.

# 43. வறுமைக் குழந்தை

(கண்டோர் கூற்று)

சுவை: இளிவரலும் அழுகையும்

1. வறியோர் வீடாம் குடிசையிலே
வந்து பிறந்த குழந்தையைப்பார்;
சிறுமை தனையே இளமையினிற்
சேர்ந்து நிற்பது பரிதாபம்.

2. எண்ணெய் அறியாத் தலைமயிரில்
ஈரும் பேனும் குடியிருக்கும்;
உண்ணப் பாலும் கிடையாது;
உணவும் வயிற்றை நிரப்பாது.

3. நெய்யும் தயிரும் கண்டதில்லை;
நீரா காரமும் கூழுமுண்டு;
கையில் தீனி கிடையாது;
கட்டத் துணியும் அதற்கில்லை.

4. சின்ன குடிசை அதன்வீடு;
சிறுசிறு கந்தல் அதன்படுக்கை
பொன்னைப் போல நிறமிருந்தும்,
புழுதி அதனை மறைத்திருக்கும்

5. சிணுங்கும் முகமே அதற்குண்டு;
சிரித்த முகத்தைக் கண்டதில்லை;
இணங்கிக் கூடி விளையாட
எந்தக் குழந்தையும் வருவதில்லை.

# 44. சின்னப்பாப்பினை வினவுதலும் அது கூறும் விடையும்

(செவிலியும் சிறுமியும் வினாவிடை)

சுவை : உவகை

1. சின்ன பாப்பு! சின்ன தங்கம்!
என்ன செய்யுறே?
சீக்கி ரமாய்ப் பாலைக் காய்ச்ச
அடுப்பு மூட்டுறேன்.

2. பாலைக் காய்ச்சிப் பசியைத் தீர்க்கக்
குடிக்கப் போறியா?
பானை யிலே தயிரைத் தோய்ச்சுக்
கடையப் போறியா?

3. குடிப்ப தற்கும் கடைவ தற்கும்
பாலைக் காய்ச்சலே
குழந்தைக்காகப் பாலைக் காய்ச்சிக்
கொடுக்கப் போகிறேன்.

4. யார் குழந்தை? எங்கி ருக்குது?
எனக்குச் சொல்லுனும்
யாரும் அதனை வளர்ப்ப தற்கே
எண்ண வில்லையா?

5. தாயும் இல்லை; தந்தை இல்லை
மிகஇ ரங்கணும்;
தச்சன் செய்து விற்று விட்டான்
தயவும் இன்றியே.

6. காசு கொடுத்து ஆசை யாக
நானும் வாங்கினேன்;
கவலை கொண்டு அன்று முதல்
நான்வ ளர்க்கிறேன்.

# 45. சின்ன குழந்தை மனம்

(அறிவன் கூற்று) அறிவுரை

சுவை : உவகை

1. மாடி வீட்டில் வாழ்பவரே!
மனத்தில் உமக்கு மகிழ்வுண்டோ?
மணலால் வீட்டைக் கட்டுகிற
மகவின் மகிழ்ச்சி தனைப்பாரீர்!

2. கைக்குக் கிடைத்த கல்லடுப்பு
களிமண் ணாலே பானைசட்டி
வைக்கும் உணவோ நல்லமணல்
வளரும் மகிழ்ச்சிக்கு அளவில்லை.

3. விருந்தை அன்பாய் அழைத்துவரும்;
விரும்பி அவரோடு இருந்துண்ணும்
திருந்தும் இந்த விளையாட்டால்
தினமும் மகிழும் குழந்தையினம்.

4. ஊக்கம் சிறிதும் குறையாமல்
உழைப்பை அன்பை வளர்க்கின்ற
ஆக்கம் நல்கும் விளையாட்டில்
அமைந்து மகிழும் குழந்தையினம்.

5. வெள்ளிக் கலத்தில் உணவுண்டு
விரைந்த காரில் செல்பவரே!
உள்ளம் தம்மில் உமக்கமைதி
உண்டோ? உண்மை யாய்உரைப்பீர்!

6. பொய்மை வெகுளி அழுக்காறு
பொருந்தி நிற்கும் மனிதர்களே!
மெய்மை யாக நீர்கூறும்
மேவும் மகிழ்ச்சி உமக்குண்டோ?

7. கள்ளம் இன்றி அன்புமனம்
கற்றா லன்றி வாழ்க்கையினில்
எள்ளத் தனையும் இன்பமுண்டோ?
இதனை நீவிர் அறிந்ததுண்டோ?

8. சின்ன குழந்தை மனம்போலச்
சிறந்த மனத்தைப் பெற்றுவிட்டால்
பொன்னும் பொருளும் உடையவரே!
பொருந்தி நிற்பீர் நல்லின்பம்!

# 46. குழந்தைச் சிரிப்பு

1. வானத்திலே வெள்ளைத் திங்கள்
வண்ணநிலா வீசுது
கானிலுள்ள முல்லைக் கொடிகள்
கண்டுகண்டு சிரிக்குது.

2. அன்னை இடையில் அமர்ந்திருக்கும்
அழகுக் குழந்தை மகிழ்ச்சியாக
சின்னகையை நீட்டி அழைச்சு
சிரிச்சுச் சிரிச்சு மகிழுது.

3. சிரிப்பைக் கொடுக்கும் மதியைப்பார்
சிறந்தநிலா ஒளியைப்பார்
சிரிக்கும் முல்லைப் பூவைப்பார்
சிரிக்கும் குழந்தை பல்லைப்பார்

4. வெள்ளை யான நிலாவையும்
விரிந்த முல்லைப் பூவையும்
உள்ளத் தாலே உவமையாக்கி
உயர்ந்த குழந்தை சிரிப்பைப்பார்.

# 47. உறவு வேண்டுமா சண்டை வேண்டுமா

1. சின்னம் சிறிய பாலர்களே
சேதி ஒன்றைக் கேளுங்கள்
கருத்தாய் இதனைக் கேளுங்கள்
கருத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

2. உறவு சண்டை என்றிரண்டும்
உங்கள் உளத்தில் உதிக்கிறது
உறவு அதனால் இன்பம்வரும்
சண்டை அதனால் துன்பம்வரும்.

3. உறவு இருந்தால் அன்புவரும்
சண்டை இருந்தால் வன்புவரும்
உறவு இருந்தால் இன்சொல்வரும்
சண்டை இருந்தால் வன்சொல்வரும்.

4. உறவு இருந்தால் வாழ்வுவரும்
சண்டை இருந்தால் தாழ்வுவரும்
எந்த ஒன்று உங்களுக்கு
ஏற்றது என்றே அறிந்துகொள்வீர்.

# 48. ஒன்றை ஒன்றாய்க் கருதும் குழந்தை உலகம்

(கண்டோர் கூற்று)

1. பாப்பா செய்யும் காரியங்கள்
பார்க்கப் பார்க்க வியப்பாகும்;
கேட்பா ரற்றுக் கிடக்கின்ற
கிளிஞ்சிலைக் கல்லைப் பொறுக்கிக்கொள்ளும்.

2. காசு களென்றே பெயர்வைக்கும்
கருத்தாய்க் கொடுத்து வாங்கிக்கொள்ளும்
தூசினைப் போலே சிலர்நினைந்துத்
தொட்டால் அவரைக் கடிந்துகொள்ளும்.

3. ஒன்றை ஒன்றாய்க் கருதிடுதல்
உயர்ந்த புலவன் கருத்தென்பர்
என்றும் அந்தக் கருத்தினையே
இயற்றி மகிழும் குழந்தையினம்.

# 49. நல்ல குழந்தை

1. நல்ல நல்ல குழந்தை
 நன்மை உள்ள குழந்தை
கல்லைப் போன்ற மனசைக்
 கரைய வைக்கும் குழந்தை.

2. சிரித்துச் சிரித்துக் கிடக்கும்
 சீக்கி ரத்தில் சிணுங்கும்
விரித்து விட்ட பூப்போல்
 விருப்பம் நல்கும் குழந்தை.

3. கையைக் காலை அசைக்கும்
 கத்திப் பாட்டும் இசைக்கும்
மெய்யைக் காணத் தீண்ட
 மேவும் நமக்கு இன்பம்.

## 50. சாப்பிடம்மா

சாப்பி டம்மா சாப்பிடு
சப்பிச் சப்பிச் சாப்பிடு
பருப்புச் சோற்றைச் சாப்பிட
பறக்கும் காகம் வந்திடும்
பாலும் சோறும் சாப்பிட
பச்சைக் கிளியும் வந்திடும்
காக்கை கிளிகள் சாப்பிடக்
கலத்தில் சோற்றைச் சாப்பிடு
உனக்கு ஒருவாய் வாங்கிக்கோ
கிளிக்கு ஒருவாய் கொடுக்கிறேன்
காக்கைக்குக் கொஞ்சம் போடுறேன்
கையில் மிச்சம் சாப்பிடு.

# 51. நாலு மூடர் வந்தபோது நன்மை என்ன நடைபெறும்?

(கண்டோர் கூற்று) சுவை: அச்சம்

1. மயிலுங் குயிலுஞ் சேர்ந்து கொண்டு
மாம ரத்தில் வாழ்ந்தன;
மக்கட் கெல்லாம் ஆடிப் பாடி
மனம கிழ்ச்சியைத் தந்தன.

2 குழந்தைக் கூட்டம் அங்கு வந்து
குயிலை மயிலை நாடிடும்;
கும்ப லாகக் கூடி நின்று
குதித்து மகிழ்ந்து பாடிடும்.

3. எங்கி ருந்தோ குரங்குக் கூட்டம்
இங்கே வந்து சேர்ந்தன;
இலையைத் தளிரைப் பூவைக் கிள்ளி
இருக்குங் காயைத் தின்றன.

4. கத்திக் கத்திச் சண்டை யிட்டுக்
கலகஞ் செய்து திரிந்தன;
காண வந்த குழந்தைக் கூட்டம்
களிப்பை இழந்து ஓடின.

## இதனைப்போல

5. நன்கு கற்ற அறிஞர் வாழும்
நல்ல கல்விக் கழகத்துள்
நாலு மூடர் வந்த போது
நன்மை என்ன நடைபெறும்?

# 52. கல்வியும் காமமும்

(ஆசிரியன் கூற்று)

சுவை : இளிவரல்

1. கல்விப் பயிரை வளர்த்திடுங்கால்
காமக் களையை வளர்க்காதீர்;
நல்ல மனத்தில் கல்வியையே
நாளும் நாளும் வளர்த்திடணும்.

2. தனக்கும் உலகம் முழுவதற்கும்
தக்க நலனைக் கல்விதரும்
தனக்கு மட்டும் சிற்றின்பைத்
தந்தே அழிக்கும் புன்காமம்.

3. காமம் உடற்கு நோய்விளைக்கும்;
கல்வி அறிவை மிகவிளைக்கும்
ஏமம் எதுவென் றாய்ந்திடணும்
இளையோர்க்கு இதனை இயம்புகிறேன்.

4. உயர்ந்த கல்வி கற்றிடுங்கால்
உளத்தில் காமம் உண்டாயின்
அயர்ந்தே போகும் அக்கல்வி
அந்தோ! பயனை இழந்தீரே!

5. கண்ணி னாலே சிலபெண்கள்
காதற் கடிதம் எழுதிடினும்
திண்மை யுற்றுக் கலங்காத
தீரன் உலகிற் பெருவீரன்.

6. கண்ணாற் கண்ட பேரையெலாம்
காமக் குறிப்பால் நோக்கிடுவோன்
நண்ணா நின்ற பேயாவான்;
நல்ல மனித னிவனல்லன்.

# 53. முதல் தொண்டு

1. பலூனைக் கேட்கும் பாப்பா
   பலூன் கேட்பது காற்று
   பட்டம் கேட்பான் தம்பி
   பட்டம் கேட்பது காற்று.

2. மூக்கால் நாமும் வாழ்வோம்
   மூக்குக் கேட்பதும் காற்று
   காற்றே உலகை நடத்தும்
   கண்ணில் காணாப் பொருளாம்.

3. நல்ல காற்றை முகர்ந்தால்
   நாமும் நன்றாய் வாழ்வோம்
   கெட்ட காற்றை முகரின்
   கெடுதல் பலவும் உண்டாம்.

4. எங்கும் எச்சில் குப்பை
   இழிந்த மலமும் சேறும்
   தங்கி நாறச் செய்தால்
   தாழ்ந்து காற்றுக் கெடுமே.

5. காற்றை நன்றாய் வைக்கக்
   கற்றுக் கொள்ள வேண்டும்
   ஏற்ற நல்ல தொண்டுள்
   இதுவே முதன்மைத் தொண்டாம்.

# 54. நல்ல தொழிலைச் செய்திடுவோம்

1. நாடும் நாமும் வாழ்ந்திடவே
நல்ல தொழிலைச் செய்திடுவோம்
காடும் மேடும் திருத்திடுவோம்
கழனிகள் பலபல செய்திடுவோம்.

2. அணைகள் ஏரிகள் அமைத்திடுவோம்
ஆறும் குளமும் வெட்டிடுவோம்
இணையில் லாத உழுதொழிலால்
எல்லா உணவும் படைத்திடுவோம்.

3. இரும்புத் தொழில்பல செய்திடுவோம்
இயந்திரம் எல்லாம் இயற்றிடுவோம்
கரும்பின் ஆலை பஞ்சாலை
கலைநூல் ஆலைகள் அமைத்திடுவோம்.

4. போக்கும் வரவும் நடந்திடவே
புதுப்புது கார்கள் செய்திடுவோம்
கோக்கும் ரயிலைக் கப்பல்களைக்
குணத்தில் சிறக்கச் செய்திடுவோம்.

5. வானக் கப்பலும் செய்திடுவோம்
வகையாய்ச் சைக்கலும் இயற்றிடுவோம்
கானத் தியங்கும் வண்டிகளும்
காரில் சிறக்கச் செய்திடுவோம்.

6. பற்பல நூல்கள் படைத்திடுவோம்
பலபல பண்கள் பாடிடுவோம்
அற்புத மாகப் பாடிக்கொண்டே
ஆனந்த நடனம் செய்திடுவோம்.

# 55. பட்டம்

1. அம்மா கொடுத்த காசைத் தந்து
ஆனை வாங்கினேன்
அப்பா கொடுத்த காசைத் தந்து
குதிரை வாங்கினேன்.

2. பாட்டிக் கொடுத்த காசைத் தந்து
பலூன் வாங்கினேன்
பாட்டன் கொடுத்த காசைத் தந்து
பட்டம் வாங்கினேன்.

3. கருப்புப் பட்டம் சிவப்புப் பட்டம்
கலருள்ள பட்டம்
கையி னாலே செய்து விற்கும்
காகிதப் பட்டம்

4. வாலை வைத்து நூலைக் கட்டி
வானத்தில் விட்டேன்
வட்டம் இட்டுப் பறவை போல
வந்து பறக்குதே.

5. இன்றைக் கெல்லாம் எங்கள் பட்டம்
எழுந்து பறந்திடும்
இன்று போகின் நாளைக்கு எங்கள்
பள்ளி திறந்திடும்.

# 56. நானும் நீயும் ஒன்று

1. பாடிப் பாடி ஆடவே
பள்ளிச் சிறுவர் கூடுவோம்
கூடிக் கூடிப் பாடவே
கும்ப லாகச் சேருவோம்.

2. நானும் நீயும் ஒன்றுதான்
நாலு மூனும் ஏழுதான்
நானும் நீயும் ரெண்டில்லை
நாலு மூனும் எட்டில்லை.

3. ஒன்றி வாழும் வாழ்வினை
இன்று நாமும் கற்றனம்
என்றும் இந்த வாழ்விலே
நின்று நாமும் வாழ்குவோம்.

## 57. என்றைக்கும் வேண்டுவது

பாடம் படித்தல் இன்றைக்கு
பட்டம் பெறுதல் நாளைக்கு
சிறியவன் என்றல் இன்றைக்கு
பெரியவன் ஆதல் நாளைக்கு
மாணவன் என்றல் இன்றைக்கு
மந்திரி ஆதல் நாளைக்கு
வறியவன் என்றல் இன்றைக்கு
வாழ்வினைப் பெறுதல் நாளைக்கு
ஆனால்,
நல்லவன் என்றல் என்றைக்கும்
நமக்கு வேண்டும் குழந்தைகளே!

## 58. நேசம் வேண்டும் நெஞ்சில்

பாட்டி மடியில் பாப்பா
பாப்பா மடியில் பொம்மை
பொம்மை முடியில் பூக்கள்
பூக்கள் கொடுக்கும் வாசம்
வாசம் போலே உனக்கு
நேசம் நெஞ்சில் வேண்டும்

# 59. உண்மை கற்ற மனிதர்

1. ஆற்றில் குளத்தில் குளிக்கலாம்
அழுக்குத் துணியும் துவைக்கலாம்
சேற்றில் குளிக்க முடியுமோ?
சேலைத் துவைக்கக் கூடுமோ?

2. மெய்யை மனத்தில் கொள்ளலாம்
மேலும் அதனைச் சொல்லலாம்
பொய்யை எண்ணப் போகுமோ?
பொருந்தச் சொல்லல் ஆகுமோ?

3. திண்மை அற்ற உடலொடு
தேய்ந்த எளியர் ஆயினும்
உண்மை கற்ற மனிதரே
உலகில் பெரிய மனிதரே.

4. உலகில் யாவர் உளத்திலும்
உண்மை ஊன்றி இருக்குமேல்
அலகில் லாத நலமெலாம்
அரும்பிக் காய்த்துக் கனியுமே.

# 60. தீபாவளி

தீபா வளிதான் வந்துவிட்டால்
திருநாள் போலே கொண்டாட்டம்

எண்ணெய் தேய்த்து முழுகிடுவார்
இடையில் புதிய உடைஉடுப்பார்

வடைகள் முறுக்கு லட்டுருண்டை
வட்டத் தோசை தின்றிடுவார்

கடையில் பட்டாஸ் மத்தாப்புக்
காசுக்கு வாங்கிக் கொளுத்திடுவார்

பட்பட் என்னும் சத்தம் வரும்
படபட என்றும் சத்தம் வரும்

இந்தச் சத்தம் சிறுவருக்கே
எல்லை இல்லா மகிழ்ச்சி தரும்

வெள்ளை சிவப்பு மத்தாப்பை
வேடிக்கை யாகக் கொளுத்திடுவார்

சங்குச் சக்கரம் புஸ்வானம்
சமத்தாய்க் கொளுத்தி மகிழ்ந்திடுவார்

அணுகுண்டு வெடியும் ராக்கெட்டும்
அனைத்தும் கொளுத்தி ஆர்ப்பரிப்பார்

எங்கும் ஒலியும் ஒளிகளுமாய்
இருக்கும் தீபா வளிதானே

மனத்தில் கவலை இல்லாமல்
மகிழ்ச்சி யாக விளையாடத்

தினமும் தீபாவளி வந்தால்
திருப்தி என்பார் சிறுவர்களே.

# 61. சிரிச்சி விளையாடு

1. சின்னத் தம்பீ! சிணுங்காதே
சிறந்த மிட்டாய்த் தருகின்றேன்
தின்னத் தின்ன இனிப்பாகும்
திரும்பத் திரும்பத் தருகின்றேன்.

2. சின்னப் பொம்மைகள் தந்திடுவேன்
சிவப்புப் பட்டமும் கொடுத்திடுவேன்
இன்னும் என்ன வேணுந்தம்பி
எழுந்து குதித்து விளையாடு.

3. சிரிச்சிச் சிரிச்சி விளையாடு
சிட்டுப் போலே பறந்தோடு
உரிச்சிக் கொடுப்பேன் ஆரஞ்சி
உன்கை விரல்தான் ஓரஞ்சி.

# 62. ஓடி விளையாடு

(சிறுமி தாயை நோக்கிக் கூறுவது)

1. ஓடி விளையாடில் — என்றன்
உள்ளம் களிப்படையும் — அம்மா!
கூடி விளையாடில் — எனக்குக்
கோடி மகிழ்ச்சி வரும்.

2. ஓடி விளையாட — இங்கே
ஒருசாண் இடமுமில்லை
கூடி விளையாட — ஒரு
குழந்தையும் இல்லையம்மா

3. வீட்டிற் சிறைகிடந்து — நெஞ்சின்
வேட்கை அழிந்தேனே — நல்ல
நாட்டின் நிலையறியேன் — கிணற்றுள்
நண்ணுந் தவளையைப்போல்.

4. காலைப் பொழுதினிலே — வீட்டுக்
காரியம் பார்த்திடினும் — இந்த
மாலைப் பொழுதிலேனும் — இயற்கை
மாண்பினைப் பார்க்கவிடு.

# 63. விளையாடுமிடத்தில் மாணவரின் திறந்த மகிழ்ச்சி உள்ளம்

1. காச்சு மூச்சென்று கத்துங்கடா — நீங்கள்
கசமுச என்றே பேசுங்கடா
கீச்சுக் கீச்சென்று கத்துங்கடா — பச்சைக்
கிளியினைப் போலே ஓடுங்கடா

2. சடுகுடு வென்றே ஓடுங்கடா — நல்ல
சதுரினை வைத்தே ஆடுங்கடா
மடமட வென்று பேசுங்கடா — உங்கள்
மனத்தினைப் போலே பாடுங்கடா.

# 64. ஆடலும் பாடலும்

1. டம்டம் மேளம் அடித்திடவே — நீ
தம்தொம் என்றே குதிபோடு
தம்திம் மத்தளம் அடித்திடவே — நீ
திம்திம் என்றே குதிபோடு.

2. வாயால் பாடும் பாட்டுக்கே — நீ
கையால் குறிப்பைக் காட்டிடுவாய்
காலால் தாளம் போட்டுக்கொண்டே — நீ
கண்ணால் கையைப் பார்த்திடுவாய்.

3. சல்சல் தாளம் போட்டிடவே — நீ
கல்கல் என்றே நடமாடு
புல்புல் தாரா மீட்டிடவே — நீ
சில்சில் என்றே நடமாடு

# 65. மின்னுகின்ற மீன்

(அண்ணன் கூறுவது)

1. மினுக்கு மினுக்கு மீனைப் பார்
மின்னு கின்ற மீனைப்பார்
எனக்கும் உனக்கும் இன்பந் தரும்
இங்கே வந்து வானைப்பார்.

2. நீலக் கடலில் வெள்ளை முத்து
நிலைத்து மிதத்தல் போலவே
நீல வானில் மீன்க ளெல்லாம்
நிற்கும் அழகை நிமிர்ந்துபார்.

3. கண்ணைச் சிமிட்டி மனத்தில் நினைத்த
கருத்தைக் கூறும் நண்பர்போல்
விண்ணை அழகு படுத்தி யெங்கும்
விளங்கி மின்னும் மீனைப்பார்.

4. இருட்டில் திரியும் திருட்டுப் பயல்கள்
எல்லாப் பொருளுங் கவருவார்;
இருட்டில் விளங்கும் இந்த மீன்கள்
எங்கள் மனத்தைக் கவருமே.

5. மாலை மதியம் ஒளியை வீசில்
மங்கி நிற்கும் மீனெலாம்
காலைக் கதிர்தன் வெயிலை வீசில்
கரந்து போகும் அவைகளே.

6. இச்சை யான காலப் பொறியில்
இனிது காலம் அறிதல்போல்
உச்சி விளங்கும் மீனைப் பார்த்தும்
உரிய காலம் அறியலாம்.

# 66. நல்ல வெல்லம்

1. வெல்லமெங்கே விளையுது?
வேலியுள்ள வயலிலே
நல்ல நல்ல கரும்பைநட்டு
நல்லவெல்லம் விளையுது.

2. கரும்பையெல்லாம் கத்திகொண்டு
கணுக்கணுவாய் நறுக்கணும்
கழனியிலே நீரைப்பாய்ச்சிக்
கருப்பம்புள்ளைப் பதிக்கணும்.

3. நாட்கள் சில சென்றபின்பு
நல்லமுளை தோணுமே
நன்குகொத்தி எருவதனை
நாமும்வைக்க வேணுமே.

4. சோலைவிட்டுக் கருப்பம்பயிர்
சோராக வந்திடும்
சோர்விலாமல் நீர்அதனைச்
சோம்பலின்றிப் பாய்ச்சணும்.

5. பத்துமாதம் சென்றபின்பு
பருத்துநீண்டு நின்றிடும்
பக்குவமாய் ஆளைவிட்டுப்
பார்த்துவெட்டிப் போடனும்.

6. சோலைகளைக் கழித்துப்போட்டு
ஆலையிலே கொடுத்திட்டால்
ஆலைசுற்றி அரைத்துஅரைத்துப்
பாலைவேறு படுத்துமே.

7. கருப்பம்பாலைக் கொப்பரையில்
காய்ச்சிப்பாகு செய்திட்டால்
கட்டியாக அச்சதாக
கருத்தைப் போலச் செய்யலாம்.

## 67. நல்ல குளம்

1. நல்ல நல்ல குளம்இது
நாமும் சென்று குளிக்கலாம்
சொல்லும் நல்ல தோழரே!
சூழ்ந்து சேர்ந்து வாருமே,

2. பாசம் கலங்கல் இல்லையே
பளிங்கு போன்ற நீரிது
ஆசை யாக நாமெல்லாம்
அழுக்குப் போகக் குளிக்கலாம்.

3. காக்கை குளித்தல் போலவே
கணத்தில் குளித்தல் நல்லதோ?
ஆக்கம் விளையத் தவளைபோல்
அழுந்தி நீந்திக் குளிக்கணும்.

4. குதித்து நீந்தி ஆடினால்
கோடி வலுவு கூடுமே
உதித்து வாழும் இளைஞர்நெஞ்சில்
உவப்பை நல்கும் நீச்சமே.

5. மூழ்கி மூழ்கி நீரிலே
மூச்சைக் கட்டி நீந்துவீர்
வாழும் நல்ல நெஞ்சினுக்கு
வலுவை நல்கும் நீச்சமே.

6. இருமல் கொண்ட சிலரைப்போல்
இறங்கிக் குளிக்க அஞ்சிடின்
சிறுமை கொண்டு வாடுவீர்
செழுமை என்றல் இல்லையே.

# 68. குண்டு குண்டு பூனையார்

(கண்டோர் கூற்று) சுவை : அச்சம்

1. குண்டு குண்டு பூனையார்
கூச்ச லின்றிச் செல்லுவார்;
ஒண்டிச் சென்று எலியையெல்லாம்
ஒழித்துக் கட்டி வெல்லுவார்.

2. குருவி பிடித்துத் தின்னுவார்
கோழிக் குஞ்சும் கவ்வுவார்;
பருக்கை மேலும் ஆசைகொண்டு
பானை சட்டி உருட்டுவார்.

3. பாலை வீட்டில் வைத்திட்டால்
பதுங்கிச் சென்று நக்குவார்;
வேலை யின்றி பகலெல்லாம்
வீட்டுப் பரணில் உறங்குவார்.

4. குண்டு நாயைக் கண்டிட்டால்
கொட்ட மெல்லாம் அடங்கியே
ஒண்டி ஓடி மறைகுவார்
ஊரைச் சுற்றித் திரிகுவார்.

## 69. வெள்ளை நிறப்பூனை

1. வெள்ளை வெள்ளை பூனைக் குட்டி
வீட்டைச் சுற்றும் பூனைக் குட்டி
அள்ளி வைச்ச சோற்றை விட்டு
அடுப்பின் மேலே ஏறிக் கிட்டு

### வேறு

2. காச்சி வைச்சப் பாலையெலாம் மிச்சம்வைக்கலே;
கலந்து வைச்சக் காப்பியையும் பாக்கி
வைக்கலே;
வெள்ளைநிறம் ஆனாலும் கள்ளம் போகுமோ?
வேப்பங் காயும் பேரிக்காய்போல்
மிகஇனிக்குமோ?

# 70. சின்ன தம்பி

1. சின்ன தம்பி! சின்ன தம்பி!
எங்கே போகிறே?
சீக்கி ரமாய்ச் செருப்பு வாங்கக்
கடைக்குப் போகிறேன்.

2. செருப்பு இரண்டு வாங்க ணும்மே
சின்னக் காலுக்குச்
சேர்த்த காசு எத்த னைநீ
கொண்டு போகிறே?

3. பாட்டி தந்த ஒத்தைக் காசு
பையில் இருக்குது
பார்த்து ரெண்டு செருப்பை வாங்கி
போட்டுக் கொள்ளணும்

4. ஒத்தைக் காசில் ரெண்டு செருப்பை
வாங்க முடியுமா?
உண்மை யாக நினைச்சுப் பாரு
உனக்குத் தெரியுமா?

5. ஒத்தைக் காசில் ரெண்டு மிட்டாய்
வாங்கித் தின்கிறேன்
உண்மை யாகச் செருப்பு வாங்க
ஏன்முடி யாது?

6. சின்ன தம்பி பேச்சைக் கேட்டுச்
சிரித்த பாட்டனார்
சீக்கி ரமாய்ச் செருப்புச் சோடி
வாங்கித் தந்தனர்.

# 71. சிட்டும், சிட்டுப்போன்ற குழந்தையும்

(கண்டோர் கூற்று) சுவை: உவகை

1. தோட்டத் திலே மஞ்சள் சிட்டுத்
துள்ளித் துள்ளிக் குதிக்குது;
ஆட்டம் போட்டுத் தென்னை மரத்தில்
அமர்ந்தி ருந்து பாடுது.

2. தென்னை மரம் சலச லக்கத்
தென்றல் காற்று வீசுது;
சின்ன சிட்டு அங்கும் இங்கும்
திரிஞ்சிக் குதிச்சு மகிழுது.

3. வீட்டி னுள்ளே சின்ன குழந்தை
விரும்பிக் குதிச்சித் திரியுது
ஊட்டு கின்ற அன்னை மடியில்
உள்ளம் குளிர இருக்குது.

4. இருந்த குழந்தை இங்கும் அங்கும்
எழுந்து குதிச்சி ஆடுது.
விருந்து போன்ற மழலை மொழியால்
வேண்டும் தமிழைப் பாடுது

5. அந்தச் சிட்டுத் தென்னை மரத்தில்
அமர்ந்து பாடி ஆடுது;
இந்தச் சிட்டு அன்னை மடியில்
இருந்துப் பாடி ஆடுது.

## 72. கடமை யறிந்த நாய்க்குட்டி

(தந்தை கூறுவது)

1. வெள்ளை வெள்ளை நாய்க்குட்டி
   வீதியில் திரியும் நாய்க்குட்டி;
   கள்வன் வந்தால் குரைத்தோட்டி
   காவல் புரியும் நாய்க்குட்டி.

2. வாலை யாட்டி மிகத்துள்ளி
   வந்து குதிக்கும் நாய்க்குட்டி
   காலின் கீழே படுத்திருக்கும்
   கடமை அறிந்த நாய்க்குட்டி.

3. தம்பி யுடனே விளையாடும்
   தக்கவர் வந்தால் வரவேற்கும்;
   நம்பி வாழும் நம்முடனே
   நாமும் காத்தல் நற்கடனே.

4. கல்லைக் கில்லை எறியாதே;
   கைத்தடி கொண்டு நொறுக்காதே!
   பல்லைக் காட்டிக் கெஞ்சுகின்ற
   பக்குவ முள்ள நாய்க்குட்டி.

# 73. நாகரிகக் காகம்

(அண்ணன் கூறுவது)

நல்ல நல்ல காகம் நாகரிகக் காகம்
சொல்லுகிறேன் பாப்பா! சுறுசுறுப்பாய்க் கேட்பாய்
காலையிலே விழிக்கும் கத்திக்கத்தி எழுப்பும்
மாலையிலே குளிக்கும் மஞ்சள்வெயில் காயும்
தீனிகளைக் கண்டால் தின்றிடுமே ஒன்றாய்
ஞானிகளைப் போலே நன்னிமித்தங் கூறும்.

—❋—

# 74. வீட்டுத் தோழன்

(சிறுவன் கூறுவது)

1. பசுவே! பசுவே! அன்பாயே
பசும்புல் தருவேன் தின்பாயே
அன்னை போலப் பால்தருவாய்
அடிக்க உன்னை மனம்வருமோ?

2. இனிய பானம் நீயிலையேல்
எனக்குக் கிடைக்கும் வகையுண்டோ?
நீதான் இங்கே இல்லையெனில்
நெய்யுந் தயிரும் பெறுவேனோ?

3. உன்றன் மோரை உண்டிட்டால்
உடலுக்கு உறுதி தந்திடுமே.
குப்பைச் சாணம் கொட்டிடிலோ
கொழுத்து வளரும் பயிர்தானே.

4. வீட்டுத் தோழன் நீயன்றி
வேறு தோழன் யாருண்டு?
கன்றும் நீயும் வாழ்ந்திட்டால்
களிப்பை அடைவேன் நான்தானே.

# 75. எருமை

1. எருமை உனக்குத் தெரியுமா?
இங்கே வந்து தெருவைப்பார்
கருமை யான உருவத்தோடு
கன்றும் தாயும் வருதல்பார்.

2. பெருத்த உடம்பு மனிதருக்கு
பெரிதும் உவமை பேசவே
கருத்த பெரிய உடம்பைப் பெற்றுக்
கருப்பு மலையில் வருதல்பார்.

3. உருண்ட சிவந்த கண்ணைப்பார்
உலக்கை ஒத்த கொம்பைப்பார்
திரண்ட முரட்டுக் காலைப்பார்
தெரிய வீசும் வாலைப்பார்.

4. பரட்டைக் கொம்பு எருமையுண்டு
பார்க்கில் அதனில் சிறந்தது
சுருட்டைக் கொம்பு எருமையுண்டு
சொல்லும் பாலை மிகத்தரும்.

5. மிகுதி யாகக் கொடுக்கும்பாலை
மிகவும் நன்றாய்க் காச்சியே
தகுதி யாகத் தோய்த்த தயிர்க்குத்
தரையில் உவமை இல்லையே.

6. சாது வாக நிற்கும்எருமை
சண்டி யாக மாறினால்
மோது கின்ற மலையைப்போல
முன்நின் றாரை முட்டுமே.

# 76. கோயில் யானை

1. கோயில் யானை வந்துநிற்கக்
குழந்தைக் கூட்டம் கூடிற்று
வாயில் உள்ள பல்லைப்பார்த்து
வாழைத் தண்டென்று எண்ணிற்று.

2. ஊசல் ஆடித் தொங்கும்ஒன்றை
உற்று நோக்கிப் பார்த்தது
காசை வாங்கிக் கொடுக்கக்கண்டு
கையென்று எண்ணிக் களித்தது

3. ஊதிப் போன உடம்பைநோக்கி
ஓடு வாயோ? என்றது
காது இரண்டும் அசையக்கண்டு
கையைக் கொட்டிச் சிரித்தது.

4. வீசு கின்ற வாலைநோக்கி
விசிறி விசிறி என்றது
காசு தந்து கழுத்தில்ஏறி
கந்தன் போல நின்றது.

5. ஆசை யாக அன்பதாக
ஆத ரிக்கும் அவர்கள்மேல்
நேசம் வைத்து நன்மைசெய்யும்
நீதி உள்ள யானையே.

6. குறும்பு செய்யும் கருத்தினோடு
கொடுமை செய்யும் அவர்களை
இரும்புக் காலில் நசுக்கிக் கொல்லும்
எமனைப் போன்ற யானையே.

# 77. அணிற்பிள்ளை

1. கோட்டைப் பெற்ற அணிற்பிள்ளை
குதிச்சுக் குதிச்சுச் சென்றிடும்
ஆட்டி வாலை அடிச்சுக் கொண்டே
பாட்டுக் கொஞ்சம் பாடிடும்.

2. பழத்தை மரத்தில் கண்டிட்டால்
பறிச்சுக் கொறிச்சுத் தின்றிடும்
எழுத்தைப் படிக்கும் குழந்தைகள்
இயம்பும் எங்கள் அணிற்பிள்ளை.

3. வீட்டுக் கூரைப் பொந்தினை
வீட தாகக் கொண்டிடும்
தோட்ட மெல்லாம் சுற்றிடும்
துன்பம் இன்றி வாழ்ந்திடும்.

4. எலியைப் போல இருப்பினும்
இரவில் உறக்கம் கொண்டிடும்
நலிவு செய்ய அறிந்திடா
நல்ல பிள்ளை அணிற்பிள்ளை.

# 78. ரயில்

1. புக்குப் புக்கு ரயிலு
புகையைக் கக்கும் ரயிலு
பக்குப் பக்கு ரயிலு
பறந்து வரும் ரயிலு

2. ஸ்டேஷ னுக்குப் போகனும்
டிக்கட் டுகள் வாங்கனும்
பேஷ னாக உடையணிந்து
பிளாட்டுப் பாரம் செல்லனும்.

3. வண்டி வந்து நின்றதும்
வாசற் படிக்குப் போகனும்
வந்த மக்கள் இறங்கின தும்
வழியில் ஏறிச் செல்லனும்.

4. இடித்து மோதி நெருக்கிடாமல்
இடத்தைப் பார்த்துக் குந்தனும்
இறங்கும் இடம் வந்தவுடன்
இறங்கி நாமும் போகனும்.

## 79. முல்லையும் வண்டும்

1. வெள்ளை நிலா வந்தது
வெள்ளை முல்லை சிரித்தது
வெள்ளை முல்லை சிரித்ததும்
விரும்பி வண்டு வந்தது.

2. வந்த வண்டு பாடிற்று
வட்ட மாக ஆடிற்று
அந்த முல்லை இதழிலே
அன்புத் தேனும் ஊறிற்று.

3. ஊறும் தேனைக் கண்டது
உளத்தில் காதல் கொண்டது
நாறும் பூவின் இதழினை
நக்கி வண்டும் உண்டது.

## 80. வண்டு

1. வண்டு நல்ல வண்டு
வாழும் நல்ல வண்டு
எங்கும் பூவைக் கண்டு
ஏகித் தேனை மொண்டு
இன்ப மாக உண்டு
இருக்கும் நன்மை கொண்டு.

2. சின்ன வண்டு போன்ற
சிறுவர் களே! நீங்கள்
கற்கும் பள்ளி கண்டு
கல்வித் தேனை மொண்டு
நிற்க நெஞ்சில் கொண்டு
நிற்கில் நன்மை உண்டு.

# 81. கண்ணாடி

1. வெள்ளை வெள்ளை கண்ணாடி
   வீட்டில் மாட்டும் கண்ணாடி
   பள்ளிக் கூடம் போகுமுன்பு
   பார்த்துச் செல்லும் கண்ணாடி.

2. என்னைப் போன்ற உருவத்தை
   எதிரில் காட்டும் கண்ணாடி
   முன்னே நின்ற பொருளையெலாம்
   முழுதும் காட்டும் கண்ணாடி.

3. கண்ணால் எல்லாப் பொருள்களையும்
   கண்டு கண்டு மகிழலாம்.
   கண்களையும் காட்டு கின்ற
   கருவி ஆகும் கண்ணாடி.

4. கண்ணாடி போல் பொருளைக் காட்டும்
   கவிகள் கூறும் புலவரை
   விண்நாட்டில் வாழும் தேவரைப்போல்
   விரும்பி நாமும் வணங்கலாம்.

# 82. பூ...பூ...பூ...

1. சின்ன பூ சிறந்த பூ
சிரிச்சுச் சிரிச்சுக் குதிக்கும் பூ
அன்னை மடியில் தவழும் பூ
அங்கும் இங்கும் நடக்கும் பூ

2. கண்ணைக் கருத்தைக் கவரும் பூ
கைகள் ரெண்டும் கமலப் பூ
எண்ண எண்ண இனிக்கும் பூ
இரண்டு கண்கள் நீலப் பூ.

3. பூ இல்லாத தலையைப் பார்
பூக்கள் வைத்த தலையைப் பார்
குழந்தை அற்ற வீட்டைப் பார்
குழந்தை வாழும் வீட்டைப் பார்.

# 83. அறுகம்புல்

1. பச்சை பச்சை அறுகம்புல்
பசுக்கள் தின்னும் அறுகம்புல்
இச்சை யான மெத்தைபோல
எங்கும் உள்ள அறுகம்புல்.

2. வரப்பில் நன்கு வளர்ந்திருக்கும்
வாளால் அறுத்துப் பசுக்கிடலாம்
சிரத்தில் சூட்டிக் கும்பிடலாம்
சிவனார் பெரிய பிள்ளைக்கே.

3. கல்யா ணங்கள் செய்கையிலே
கையில் கொண்டே வாழ்த்திடுவார்
புல்லாய்த் தோன்றிற்று என்றாலும்
புண்ணியம் உள்ள புல்லென்பர்.

4. தாவித் தாவி வேரூன்றித்
தழைத்து நிற்கும் சிறுபுல்லே!
மேவும் மழையால் கரையாமல்
மேதினி தனையும் காக்கின்றாய்.

5. உனையும் உன்தன் இனத்தினையும்
உண்டு வாழும் உயிர்பலவே
நினையில் உன்னால் வரும்பயனை
நிச்சயம் அளக்க முடியாதே.

6. உன்னைப் போல உலகினுக்கே
உதவும் நல்ல எண்ணத்தை
சின்னஞ் சிறிய வயசினிலே
சேர்த்துக் கொள்வேன் மனந்தனிலே.

# 84. மாப்பிள்ளை விட்ட எலி

(கண்டோர் கூற்று)

சுவை: நகைப்பு

1. தம்பிப் பையன் வீட்டினிலே
 தடபுட லான கல்யாணம்
 தட்டில் லட்டைக் கொட்டி வைத்தார்
 தகுதி யாக மூடவில்லை.

2. ஆசை தோன்ற எலிகளெலாம்
 அங்கே வந்து குவிந்தனவே.
 நேச மான விருந்தினர் போல்
 நிம்மதி யாகத் தின்றனவே.

3. வீசைக் காரப் பூனையண்ணன்
 விரைவாய் அங்கே வந்ததுவே;
 ஓசை யின்றி எலிகளெலாம்
 ஓட்டம் பிடித்து ஒளிந்தனவே.

4. சின்னஞ் சிறிய சுண்டெலியால்
 சீக்கிரம் ஓட முடியவில்லை
 தின்னும் லட்டுக் குவியலுக்குள்
 திருடனைப் போல ஒளிந்ததுவே.

5. பந்திக் கெல்லாம் பரிமாறப்
பரிவாய்த் தட்டை எடுத்துச்சென்று
குந்தி யிருந்தோர் இலைகளிலே
குறித்து வைத்தார் ஒவ்வொன்றாய்.

6. தலைமை யான மாப்பிளைமுன்
தலைவா ழையிலை போட்டிருந்தார்;
இலையில் லட்டென்று எண்ணிக்கொண்டே
எலியைத் தூக்கி வைத்தார்கள்.

7. வைத்த உடனே சுண்டெலிதான்
வாலைத் தூக்கி ஓடிற்று;
மைத்துனர் எல்லாம் கைகொட்டி
மாப்பிள்ளை விட்ட எலியென்றார்.

# 85. புரட்சி

1. இட்டிலி தட்டிப் போட்டார்கள்
இனிய வடையை வார்த்தார்கள்
சட்டினி தன்னை இடித்தார்கள்
சாம்பார் பொடியை அரைத்தார்கள்.

2. சோற்றைக் கூட்டி வைத்தார்கள்
சுவைபெற குழம்பை வடித்தார்கள்
ஏற்ற வாழைக் காயைக் கரைத்து
இனிய ரசமாய் வைத்தார்கள்.

3. நெய்யில் சோற்றை மிகஊற்றி
நிதமும் கரைத்துக் குடித்தார்கள்
கையால் எடுத்துப் பாயசத்தைக்
கவளம் ஆக உண்டார்கள்.

4. சேலையை இடையில் கட்டிக்கொண்டே
சிரித்து வந்தார் ஆண்களெலாம்
ஆலையில் நெய்த வேட்டிகளை
அணிந்து வந்தார் பெண்களெலாம்.

5. புரட்சி செய்தார் நம்தோழர்
புதிய புரட்சி இதுவாகும்
திரட்சி யாக உலகீரே
தினமும் இதனைப் புரிவீரே.

# 86. அவ்வை

1. எல்லை யில்லாப் பெரிய புலவர்
இருந்த தமிழ்நாட்டில்
இளைஞர் கற்கும் சிறுநூல் செய்ய
ஏனோ மறந்தாரே.

2. அவ்வை என்ற பாட்டி மட்டும்
அந்தக் குறைதீர
ஆத்திச் சூடி முதலாம் நூல்கள்
அழகாய்ச் செய்தாளே.

3. ஏழை செல்வர் என்று நினையாள்
எங்கள் தமிழ்ப்பாட்டி
கூழை உண்ணக் கொடுத்த பேர்க்கும்
குறித்துக் கவிசொல்வாள்

4. சேரன் சோழன் பாண்டியன் என்றுச்
செப்பும் வேந்தர்களுள்
யாரும் இவளை மதித்துப் போற்றி
யாதும் உதவிடுவார்.

5. சிவனார் பிள்ளை இருவர் தமையும்
சிறப்பாய் வழிபட்டாள்
சிறந்த யானைப் பிள்ளை அருளால்
சேர்ந்தாள் கயிலாயம்.

# 87. கருணைத் தொண்டு

1. கற்கும் நல்ல குழந்தைகளே!
கருத்தை எண்ணிக் கூறுங்கள்
எதிர்கா லத்தில் நீங்கள்தாம்
எப்படி வாழ நினைக்கின்றீர்?

## ஒரு குழந்தை

2. கவர்னர் ஆகி வாழ்ந்திடணும் - இன்றேல்
கலெக்டர் ஆகி வாழ்ந்திடணும்
இதுவே என்தன் முதல்எண்ணம்
என்று மொழிந்தது ஒருகுழந்தை.

## மற்றொரு நல்ல குழந்தை

3. கவர்னர் ஆக விரும்பலை
கலெக்டர் ஆகவும் விரும்பலை
காந்தி காம ராசரைப்போல்
கருத்தில் வாழ விரும்புறேன்
கவர்னர் கலெக்டர் ஆகிவிட்டால்
காசு பணம் சேர்க்கலாம்
காந்தி யைப்போல் வாழ்ந்துநின்றால்
கருணைத் தொண்டு செய்திடலாம்.

## 88. குழந்தைப் பாட்டின் வாழ்த்து

குழந்தை நல்ல உள்ளம்
குழைந்த அன்பின் உள்ளம்
குழந்தைப் பாட்டின் நடையும்
குழைந்த அன்பு நடையாம்.
குழந்தைப் பாட்டைக் கற்ற
குணத்தில் சிறந்தோர் எல்லாம்
குழைந்த அன்பைப் பெற்றே
குறைவில் லாமல் வாழ்வார்.

## 89. குழந்தையின் பாட்டோவியம்

[குழந்தை வடிவத்தைப் பாட்டால் எழுதியது]

நீலமும் தாமரையும்
நீரிலே பூத்திருக்கும்;
கோலநிழல் பந்தரிலே
கொடிமுல்லை பூத்திருக்கும்;
வாடாத ரோஜா
வடிவின் அழகாலே
கண்டார் மனத்தைக்
கவரும் குழந்தைக்கு,
ஓடுங்கால் தாமரைப் பூ;
உண்ணுங்கை தாமரைப் பூ;
நாடுங்கண் நீலப் பூ;
நல்சிரிப்பு முல்லைப்பூ.

## 90. விளையாடுபவரை உடன் பிறந்தோராகக் கருதுக

அண்டை வீட்டுச் சிறுவனும்
அடுத்த வீட்டுச் சிறுமியும்
ரெண்டு பேரும் தெருவினில்
ரெண்டு வீடு கட்டினார்.
வீடு கட்டி முடிந்ததும்
விருப்பம் மிக்க இருவரும்
கூடி அந்த வீட்டினில்
கூடி ஆட எண்ணினர்.

*இந்த வீட்டில் இருவரும் எவ்வாறு விளையாடுவது என்று வினாவிக் கொண்டு, அவர்கள் கூறியவற்றுள் சிறுவன் கூறிய கருத்து:*

கணவ னாக இருக்கிறேன் — நீ
மனைவியாக இருந்துகோ
இணங்கி இந்த வீட்டினில்
இருந்து விளை யாடுவோம்.

**இதனைக் கேட்ட சிறுமியின் பதில்**

கணவன் மனைவி ஆயிடில்
கலந்து ஒன்றில் இருக்கனும்
இணங்கி ரெண்டு வீட்டினில்
இருக்க லாமா? என்றது.
அக்கா ஆக இருக்கிறேன்
தம்பியாக நீ இரு
தக்கபடி இந்த வீட்டில்
தங்கி விளை யாடலாம்.

# 91. சிறந்த விளக்கு

1. சின்ன குழந்தை மனத்தில்
சிறந்த விளக்கை ஏற்று,
மின்னல் விளக்கின் மேலாய்
மேவும் அறிவு விளக்கே!

2. அறிவு விளக்கு இருந்தால்
ஆக்கம் பலவும் உண்டாம்;
வறுமை என்பது இல்லை;
வாழும் வழிகள் தெரியும்

3. எண்ணை எழுத்தை அறியின்.
இனிய ஒழுங்கை அறியின்,
பண்ணும் தொழிலை அறியின்,
பாரில் குழந்தை சிறக்கும்.

4. வான மீதில் பறந்து
வண்ணக்கடலை நீந்தி
ஞான வாழ்வைப் பெற்று
நன்கு வாழும் குழந்தை

## 92. ஆற்றங்கரை

1. ஆற்றங்கரை ஆற்றங்கரை
அழகுத்தெய்வம் விளங்குங்கரை
ஏற்றவெள்ளம் படியுங்கரை
எகிரிப்பாய்ந்து வடியுங்கரை.

2. வெள்ளைமணல் படிந்தகரை
விருப்பமெல்லாம் வளருங்கரை
கொள்ளையான மரங்களெல்லாம்
குழைத்துத்தளிர்த்துப் பூக்குங்கரை.

3. பூவின்மணம் வீசுங்கரை
பூங்குயிலுங் கூவுங்கரை
நாவினாலே சுவைப்பதற்கும்
நற்கனிகள் உதிருங்கரை.

4. வாய்மைகற்ற வாணிகர்போல்
வளப்பமெல்லாம் வாய்ந்தகரை
தூய்மை பெற்று விளங்குங்கரை
துன்பம்போக்கும் இன்பக்கரை.

# 93. பூங்கொத்து

1 மரத்தைப்பார்! மரத்தைப்பார்!
மனத்தைக்ககவரும் பூங்கொத்து;
பூங்கொத்து பூங்கொத்து
புதுமைநல்கும் பூங்கொத்து.

2. நிறத்தைப்பார்; மணத்தைப்பார்;
நிற்குங்கொத்தின் தோற்றம்பார்;
புறத்தில்வந்த வண்டின்கூட்டம்
புதியபாட்டைப் பாடல்பார்.

3. பூவினாலே வாழ்ந்திருக்கும்
புதியநல்ல வண்டெலாம்.
பூவைச்சூடி வாழ்ந்திருப்பார்
புதியநல்ல பெண்டெலாம்.

# 94. கறுப்புக் காக்கையை வெறுக்காதே

1. கறுப்புக் காக்கையை வெறுக்காதே
காரியம் அதனால் பலவுண்டு
விருப்புக்கு உரிய அதன்செயலை
விரும்பி நாமும் கற்றிடணும்

2. காலையில் விழிக்குங் குணமொன்றோ?
கத்தி மக்களை எழுப்பிவிடும்
ஞாலந் தனக்கே இதைப்போலே
நன்மை விளையும் செயலென்ன?

3. தன்னலம் உடைய மனிதரெலாம்
தாமே உண்டு வாழ்ந்திடவும்
நன்னலம் உடைய காக்கைகளோ
நாளும் உறவை அழைத்துண்ணும்

4. தீமை நிறைந்த காமத்தில்
தெரிய நடப்பார் தீயோர்கள்
காமக் குறிப்பை பிறரறியக்
காட்டும் வழக்கம் அவைக்கில்லை

5. மாலைப் பொழுதில் குளித்துவிட்டு
மஞ்சள் வெயிலை காய்ந்திடுமே
சீல முடைய இச்செயல்கள்
சிறந்தோர் செயல்கள் ஆயிடுமே.

6. கணியார் கூறும் பறவையைந்துள்
காகம் ஒன்றாம்; அக்காகம்
அணியாய்க் கரையின் விருந்தினர்தம்
அகத்தை நோக்கி அணைவாரே.

# 95. குழந்தையிலக்கியப் பாட்டின் இயல்பு

1. "பாலைக் குடிக்கும் பாலகரைப்
பகருங் குழந்தை எனலாகும்;
நூலைப் படிக்கும் இளையவரை
நுவலக்கூடாது" எனமொழிவார்.

2. "மழவும் குழவும் இளமை"யெனும்
மாண்பார் நூற்பா தனைஉணர்ந்தால்,
இளமைப் பருவம் உடையரெலாம்
எழிலார் குழந்தை எனவுணர்வார்.

3. பெரிய குழந்தை, சிறுகுழந்தை,
பேசத் தெரியாக் குழந்தையெலாம்
உரிய இளமை உடையவரே;
உணர்க, "குழவே இளமை"யென.

4. பேசத் தெரிந்த குழந்தைகளைப்
பெரிய, சிறிய எனப்பிரித்து
நேச மாக இலக்கியங்கள்
நிகழ்த்தும் முறையே மிகநன்று.

—❖—

குறிப்பு: *குழந்தையென்ற சொல் பால்குடிக்கும் குழந்தைகளை மட்டும் குறிக்காமல் இளமைப் பருவமுடைய எல்லோரையும் குறிக்கும்.*

# 96. அம்மாக் கடமை

1. தம்பி பாப்பா என்றிருவர்
தங்கப் பதுமை போல்நடந்தே
அங்கும் இங்கும் நடந்துக்கொண்டே
அன்பாய் ஏதோ பேசுகிறார்

**தம்பி**

2. அம்மா கொடுத்த பசும்பாலை
அழகுப் பூனைக் குட்டிக்கே
சும்மா குடிக்கக் கொடுத்துவிட்டேன்
சுருக்காய் எனக்குப் பசிக்கிறது.

**பாப்பா**

3. அம்மா வேலை பாலூட்டல்
அதனை மறந்துஉன் கையில்தந்தாள்
சும்மா பூனைக் குட்டிக்கே
சுயநலம் இன்றிக் கொடுத்துவிட்டாய்!

4. பாட்டி கொடுத்த பணியாரம்
பையில் நானும் வைச்சிருக்கேன்
ஊட்டி விடுவேன் உண்என்றே
உரைத்தது அந்த சிறுபாப்பா

5. அம்மா போல ஊட்டுகிற
அழகுப் பாப்பா நீ யெனக்கே
அம்மா ஆவாய் எனக்கூறி
அந்தத் தம்பி சிரித்தானே.

# 97. பூவும் வண்டும்

1. வெள்ளை வெள்ளை முல்லை
விரிந்த நல்ல முல்லை
கரிய கரிய வண்டு
காண வந்த வண்டு

2. முல்லைப் பூவைக் காணும்
முன்னர் வந்து தோன்றும்
நல்ல ஆட்டம் போடும்
நல்ல தமிழைப் பாடும்

3. முத்தம் கொஞ்சம் கொடுக்கும்
முல்லைத் தேனை எடுக்கும்
சத்தம் இன்றிப் பறக்கும்
சங்கை யின்றித் துறக்கும்

# 98. சின்னக் குழந்தை முகம்

1. காலைப் பொழுதில் எழுந்து
கமலக் குளத்தைப் பாரு
மாலைப் பொழுதில் சென்று
மலரும் முல்லையைப் பாரு

2. சின்னக் குழந்தை முகத்தைச்
சிரிக்கும் பொழுதில் பாரு
தின்னும் தீனி கொடுத்துத்
தின்னும் பொழுதும் பாரு

3. புகழ்ந்து புகழ்ந்து கூறப்
பொலியும் பொழுதும் பாரு
திகழ்ந்த கமலம் முல்லை
தெரியும் முகத்தில் பாரு

# 99. வாழ்க்கை

1. எதற்குப் படிக்கிறாய் தம்பீ
ஏன் படிக்கிறாய்?
நல்ல வாழ்க்கை நடத்துதற்கே
நான்ப டிக்கிறேன்

2. நல்ல வாழ்வை எப்படிநீ
நடத்தப் போகிறாய்
நான றிய உன்கருத்தை
நன்கு சொல்லணும்

3. கல்வி கற்ற அறிவினாலே
தொழிலைத் தேடுவேன்
கணக்கில் லாத பொருளையெல்லாம்
தேடி வாழ்குவேன்

4. பொருளைமட்டும் தேடி விட்டால்
வாழ்க்கை ஆகுமா?
புகழில்லாத வாழ்வும் நல்ல
வாழ்க்கை ஆகுமா?

5. தன்னலத்தால் வாழ்ந்து விட்டால்
வாழ்க்கை ஆகுமா?
தகுதிபெற நாடும் வாழத்
தாங்கள் வாழணும்.

6. அன்புவேண்டும் அருளும் வேண்டும்
அறமும் வேண்டுமே
அவைகளோடு பொருளைத் தேடி
வாழ வேண்டுமே

7. ஏட்டைப் புரட்டிப் படிச்சிக் கொண்டு
வீட்டி லிருக்கப் புடிக்கிலே
மாட்டைக் கண்ணைப் மேய்ச்சுக் கொண்டு
காட்டைச் சுற்றித் திரியணும்.

## 100. இன்பம் தரும் பொருள்கள்

வேனிலுக்குள் வேனில்
விரும்பும்இள வேனில்;
பொழுதுக்குள்ளே பொழுது
பொலியுஞ்சிறு மாலை;
கோள்களுக்குள் கோளே
குளிர்ந்தஇளந் திங்கள்;
காற்றினுக்குள் காற்று
கலந்துவருந் தென்றல்;
மக்களுக்குள் மக்கள்
மகிழுஞ்சிறு மக்கள்;
இப்பொருள்கள் ஒன்றாய்
இயைந்து நின்றால் இன்பே.

—※—

# 101. நத்தை

1. நத்தையம்மா! நத்தையம்மா!
எங்கே போகிறே?
நல்லபாம்பு குடிக்கத்தண்ணி
கொண்டு போகிறேன்.

2. ஒத்தைக்குடத் தண்ணிமட்டும்
அதற்குப் போதுமா?
ஒருவரல்ல நாங்கள்பலர்
ஊர்ந்துச் சுமக்கிறோம்.

3. எத்தனை நாள் இந்தவேலை
உங்கட்கு இருக்கும்?
இந்த மழைக்காலமெல்லாம்
எங்கட்கு இருக்கும்.

4. குத்தகையாய்க் கூலிகளும்
என்ன வாங்குறீர்?
குழைத்துவரும் தளிரையெல்லாம்
கூலி வாங்குறோம்.

# 102. கண்ணன்

1. கண்ணன் எங்கள் சிறுகுழந்தை
காளையைக் கண்டால் களித்திடுவான்
வெண்ணெய்த் தாழியைக் கண்டிடிலோ
வெகுவாய்க் குதித்து மகிழ்ந்திடுவான்.

உண்ணும் பொழுது நெய்வேண்டி
உறியைக் காட்டி அழுதிடுவான்
கண்ணுக் குட்டி துள்ளிவரின்
கையை உதறிப் பின்செல்வான்.

3. வீடுகள் தோறும் சென்றிடுவான்
வெண்ணெயைக் கேட்டு நின்றிடுவான்
ஆடும் கோவியர் வந்தாலோ
அவருடன் ஆடச் சென்றிடுவான்.

4. வீட்டில் தயிரைக் கடைந்திடுங்கால்
விழித்துத் தாய்ப்பின் நின்றிடுவான்
காட்டில் மேயும் பசுவின்பின்
குழலை ஊதி நடந்திடுவான்.

5. ஆற்றுப் பெருக்கில் குதித்திடுவான்
அழகிய மலரைச் சூடிடுவான்
காற்றில் மழையில் அஞ்சாமல்
காளையைப் போலே திரிந்திடுவான்.

6. சிறுவர் தம்மைக் கூட்டிடுவான்
சீடையும் வெண்ணெயும் தந்திடுவான்
குறுநகை கொண்டே திரிந்திடுவான்
கோபம் அறியாச் சிறுகுழந்தை

## 103. நல்ல நண்பர்

1. நல்ல திரிச்சி நகரந் தன்னில்
நாளும் வாழ்ந்து வருபவன்
நாடுங் கலையை உழைத்துக் கற்கும்
நல்ல கந்தன் என்பவன்.

2. தனக்குக் கிடைத்த ஓய்வு நாளைத்
தக்க இடத்தில் கழித்திட
நினைத்து நினைத்துப் பார்த்த போது
நெஞ்சில் இதனைக் கருதினான்.

3. கொல்லி மலையைச் சார்ந்த ஊரில்
குணத்தில் சிறந்த கேண்மையான்
நல்ல பொன்னன் வாழும் வீட்டில்
நன்கு தங்கக் கருதினான்.

4. உள்ளம் ஒத்த நண்பர் வீட்டில்
ஓய்வு எடுத்துத் தங்கினால்
உழைக்கும் நல்ல மனத்தி னர்க்கு
ஊக்கம் பொங்கும் என்பரே.

5. கள்ளம் அற்ற பொன்னன் வீட்டில்
கந்தன் வந்து நின்றதும்
காதல் தோன்றும் முகத்தைக் காட்டிக்
கையை நீட்டி அழைத்தனன்.

6. காலுங் கையுங் கழுவ நீரும்
கறந்த பாலுங் கொடுத்தனன்
பாலை உண்ட நல்ல நண்பன்
படுத்துக் கொஞ்சம் உறங்கினான்.

7. வந்த இளைப்புத் தீர்ந்த பின்னர்
வந்து பொன்னன் எழுப்பினான்
நந்த வனத்துக் கிணற்றில் குளித்து
நண்பர் உண்ண அமர்ந்தனர்.

8. கையிற் குற்றும் அரிசிச் சோறும்
காட்டுப் பருப்புக் கடைசலும்
நெய்யுந் தயிரும் நல்ல கறியும்
நீண்ட இலையில் படைத்தனர்.

9. உண்ணுங் காலம் ஊமை போல
உரையை நீக்கி உண்ணென
நண்ணு கின்ற விதியை நீக்கி
நண்பர் பேசி உண்டனர்.

10. நண்ணும் நோயை நீக்கி நமக்கு
நல்ல வலுவைத் தருதலால்
உண்ணும் உணவை அமுத மாக
உலகில் அறிஞர் உரைசெய்வர்.

11. காசில் ஆசை கொண்ட கயவர்
கலப்புச் செய்யும் உண்பொருள்
மோச மான நோயைத் தந்து
முடிவும் செய்யும் அறிதியோ?

12. நல்ல பாலுந் தயிரும் நெய்யும்
நாட்டில் கிடைக்க வில்லையே;
கல்லைப் போன்ற கொடியர் நெஞ்சில்
கடுகும் இரக்கம் இல்லையே.

13. கடலை எண்ணெய் கூட நாட்டில்
கலப்பு இல்லாமல் கிடைக்கலே;
கலப்புச் செய்யுங் கயவ ருக்குக்
கடவுள் தீமை செய்யலே.

14. இன்று பறித்துச் சமைத்த கறியும்
இன்று கடைந்த வெண்ணெயும்
நன்கு குற்றும் அரிசிச் சோறும்
நல்ல அமுதம் ஆகுமே.

15. நானும் நீயும் கூடி உண்ணும்
நல்ல நண்பும் இன்பமும்
வான மீதில் அமுதம் உண்ணும்
வான வர்க்கும் இல்லையே.

16. என்று சொன்ன கந்தன் சொல்லை
ஏற்ற பொன்னன் கூறுவான்
நன்று நண்ப! என்க ருத்தை
நானும் அறியக் கூறுவேன்.

17. நெல்லுச் சோறும் நல்ல கறியும்
நெய்யும் நிதமுங் குறைவிலை;
நல்ல நண்பன் இல்லை என்றே
நானும் வருந்தி இருந்தேனே.

18. கள்ள மற்ற நண்ப ரோடு
கலந்து பழகுங் காலமே
உள்ள நாளில் இன்பம் என்று
உறுதியாக எண்ணுவேன்.

19. எனக்குக் கிடைத்த நல்ல நண்ப!
என்றும் உன்னை விரும்பியும்
உனக்கு விளையும் நலத்தை என்றும்
உளத்தில் நினைத்தும் இருப்பனே.

# 104. குரங்கண்ணா

குரங்கண்ணா !! குரங்கண்ணா !!
குழந்தைக்குப் பழமொண்ணு போடண்ணா.

1. கூனிக் கூனி உட்கார்ந்து
குர்குர் என்றே கத்துகிறாய்
வானை முட்டும் மரமெல்லாம்
வாழும் வீடோ உன்றனக்கு (குரங்கண்ணா)

2. காலால் கையால் தாவிடுவாய்
கடித்துத் தின்பாய் பல்லாலே
வாலால் உனக்குப் பயனென்ன?
வாலுக் குரங்குப் பேர் பெற்றாய், (குரங்கண்ணா)

3. அங்கும் இங்கும் பார்த்திடுவாய்
அடிக்கடி உடம்பைச் சொரிந்திடுவாய்
எங்கும் நொடியில் ஏகிடுவாய்
ஏனோ சும்மாய் அசைந்திடுவாய் (குரங்கண்ணா)

4. குட்டிக் குழந்தை உனக்குண்டு
குண்டுநல் மந்தி உன் மனைவி
பட்டிக் காடா? பட்டிணமா?
பார்க்க விரும்பிப் போவாயா? (குரங்கண்ணா)

# 105. பட்டிக் காட்டைப் பார்க்கப் போகிறோம்

1. எட்டு நாட்கள் முடியுங்காறும்
எங்கள் பள்ளி விடுமுறை
பட்டிக் காட்டைப் பார்க்கப் போகப்
பள்ளித் தோழர் விரும்பினோம்

2. கட்டை வண்டியில் காளை மாட்டைக்
கட்டி நாங்கள் ஏறினோம்
குட்டை வண்டிக் காரன் குந்தி
கோலை ஓங்கி ஓட்டினான்.

3. மட்டில் லாத வேகத்தோடு
மாடு ரெண்டும் சென்றன
கட்டை வண்டி கடகடஎன்று
காரைப் போல ஓடிற்று.

4. குட்டிச் சுவரும் கூரைவீடும்
குப்பைமேடும் நிறைந்ததோர்
பட்டிக் காட்டை நாங்களடைந்துப்
பார்த்துப் பார்த்துக் கலங்கினோம்

5. ஒட்டிப் போன உடம்பி னோடு
உடையி லாத சிறுவர்கள்
வெட்டி யாகத் திரிதல் கண்டு
விசனம் நாங்கள் கொண்டனம்.

6. இளைச்ச எருதை ஏரில் பூட்டி
இங்கும் அங்கும் உழுதிடும்
களைச்ச உழவர் தம்மைக் கண்டு
கவலை நாங்கள் கொண்டனம்.

7. கல்வி செல்வம் நாக ரீகம்
காணும் மூன்றும் இன்றியே
அல்லல் கொண்ட அந்த மக்கள்
அவதி கண்டு வாடினோம்.

# 106. பாட்டியம்மா

பாட்டி யம்மா பாட்டி யம்மா
பாலர்க்குக் கதை சொல்லு பாட்டி யம்மா.

1. ஏட்டில் எழுதாக் கதைகளெலாம்
எப்படி மனதில் எழுதிக் கொண்டாய்?
கேட்டவர் யாரும் சிரித்திடவே
கிளைக் கதை பலபல சொல்லுகிறாய் (பாட்டி)

2. வெற்றிலை பாக்குத் தந்திடுவோம்
வேண்டும் தீனியும் கொடுத்திடுவோம்
பற்றுங் கோலை எடுத்துதவிப்
பக்கத்தில் துணையாய் நின்றிடுவோம் (பாட்டி)

3. ஆத்திச் சூடி இயற்றிய
அவ்வை என்றே புகழ்ந்திடுவோம்
பேத்தியும் பேரனும் சூழ்ந்து கொண்டு
பேச்சைக் கேட்டே மகிழ்ந்திடுவோம் (பாட்டி)

4. அழுவுங் குழந்தையைத் தூக்கிக் கொண்டே
அங்கே இங்கே போகாதே
நழுவிப் போக விடமாட்டோம்
நாங்கள் சுற்றி நின்று கொண்டோம்

# 107. குட்டிக் குரங்குக் கல்யாணம்

1. குட்டிக் குரங்குக்குக் கல்யாணம்
குளத்துச் சேறு சந்தனமாம்
கொட்டி முழக்கும் மேகங்கள்
குளத்துத் தவளைக் கச்சேரி

2. வட்டத் திங்கள் விளக் காகும்
வானம் எல்லாம் மணப்பந்தல்
கொட்டஞ் செய்யுங் குரங்கெல்லாம்
கூட்ட மான விருந்தாளி

3. தட்டில் வெற்றிலை கொண்டு வந்தால்
தாவி எடுத்துத் தின்றுவிடும்
வட்டில் சந்தனம் வந்தாலோ
வாரி இறைத்துக் கூத்தாடும்

4. தேங்காய் பழத்தைக் கொண்டு வந்தால்
திருடன் போலே தூக்கிக் கொள்ளும்
பாகுகாய் மாலை கொண்டு வந்தால்
பறித்துக் கசக்கிப் போட்டு விடும்

5. தாலித் தட்டை காட்டுதற்குத்
தாத்தா குரங்கு வந்து நின்றார்
வாலுக் குரங்குக் கூட்டமெல்லாம்
வந்து தட்டைத் தொட்டனவே

6. இடித்துக் கூட்டம் நெருக்கியதால்
எங்கோ தாலி தொலைந்ததுவே
துடித்துத் தாத்தா அதைத் தேடி
துயரப் பட்டு நின்றாரே

7. தாலி தானும் கிடைக்கவில்லை
தாத்தா துயரமும் தீரவில்லை
வாலுக் குரங்குக் கூட்டமெல்லாம்
வந்து நின்றே இதுசொல்லும்

8. தாலி போனால் போகட்டும்
தம்பதி இருவர் இருக்கின்றார்
தாலி கட்டும் பழக்கமினி
தமக்கு வேண்டாம் என்றதுவே.

9. தாலி கட்டாக் கலியாணம்
தடபுடலாக நடந்ததுவே
வாலுக் கூட்டம் சோற்றையெலாம்
வந்து காலி செய்தனவே.

# 108. சிறந்த பண்புகள்

1. சின்னஞ் சிறிய பருவத்தில்
சிறந்த பண்பைக் கற்றுக் கொள்
அன்னை உன்னை வளர்த்திடவே
அன்பை முதலாய் வைத்திருந்தாள்.

2. உன்னை வளர்த்த தாயன்பு
உலகை வளர்க்க உதவிடுமே
முன்னே மனத்தில் அன்பைவை
முகத்தில் இன்சொல் வந்துவிடும்.

3. இன்சொல் வாய்க்கே அழகாகும்
ஈகை கைக்கே அழகாகும்
உன்சொல் உண்மைக்கு இடமானால்
உனக்கு நன்மை பல உண்டாம்.

4. அன்பினைக் கொண்ட உன் மனத்தில்
அறிவும் முயற்சியும் உண்டானால்
இன்பம் நல்கும் பொருளெல்லாம்
எளிதில் உனக்கு உண்டாமே.

# பேராசிரியர் திரு. அடிகளாசிரியரின் வாழ்வும் பணியும்

**(அ. சிவபெருமான்)**

தமிழ் நாட்டில் விழுப்புரம் மாவட்டம் கல்லக்குறிச்சி வட்டத்தின் தென்கோடியில் வடவெள்ளாற்றின் வடக்குக் கரையில் உள்ளது குகையூர் என்னும் கூகையூராகும், இவ்வூரை இலக்கியங்கள் குகையூர் என்று கூறும். பொது மக்கள் கூகையூர் என்று கூறுவர்.

திருமூல நாயனாருடைய கொள்கையில் பயிற்சியுடைய சித்தநாதர் என்னும் சித்தர் ஒருவர் இவ்வூருக்கு வந்து ஆற்றங்கரைப் புதருள் தங்கி, சிவயோக சமாதியை மேற்கொண்டிருந்தார. அவர் அட்டமா சித்தியிலும் வல்லவராய் இருந்தார்.

அவ்வூரை ஆண்டிருந்த குறுநில மன்னனாகிய மாலாங்கன் என்பவன் சித்தநாதருடைய பெருமையை உணர்ந்து தன் மனைவியுடன் வந்து பேரன்புடன் அவர்க்குப் பணிவிடை செய் தொழுகினான். அவ்விருவருடையபேரன் பினையும் மகப்பேறின்றி மூப்படைந்துள்ள நிலையினையும் உணர்ந்த சித்தநாதர் அவ்விருவரையும் இளமை உடையவராக ஆக்கி, வீரசைவ சமய நெறியை மேற்கொண்டு வாழுமாறு செய்து, பக்குவற்கு உபதேசிக்கும் மாதவக் குருபரனாக மாலாங்கனை ஆக்கினார். அம்மாலாங்கனிலிருந்து அவன் பரம்பரை சித்தநாதேச்சுரா தீனமாக ஆயிற்று. அப்பரம்பரையில் பிற்காலத்தில் பட்டத்துப் பெரியசாமி ஐயர் என்பவர் வளர்ந்து வந்தார். அவர் மனைவி, குங்கும அம்மாள் ஆவார். அவ்விருவரும் நன்கு படித்தவர்கள்.

அவ்விருவர்க்கும் கி. பி. 1910–இல் சாதாரணயாண்டு சித்திரைத் திங்கள் ஐந்தாம் நாள் ஞாயிற்றுக்கிழமை தனுர் இலக்கினத்தில் பூசம்நாளில்திரு. அடிகளாசிரியர் முதல்மகனாகப் பிறந்தார். இவரின் பிள்ளைப்பெயர் குருசாமி அய்யர் என்ப தாகும். பிற்காலத்தில் தனித்தமிழ் இயக்கத்தலைவர்

தவத்திரு மறைமலையடிகளார் கருத்துப்படி திரு. அடிகளாசிரியர் எனப் பெயரை மாற்றிக் கொண்டார்.

**இளமைக்காலமும் கல்வியும்:**

இவர்க்கு ஏழாம் யாண்டில் தந்தையார் காலமாகி விட்டார். இவர் தாயார் குங்கும அம்மாள் என்பவர்தான் இவரைப் பேணிப்புரந்து கல்வி கற்குமாறு செய்தார். பெரம்பலூருக்கும் அண்மையிலுள்ள நெடுவாசல் என்னும் ஊர் இவர் தாயார் பிறந்த ஊராகும் தாய்மாமன் இருவராவர். மூத்தவர் திரு. கு. சுப்பிரமணிய தேவர் இளையவர். திரு. கு சிவப்பிரகாச தேவர் ஆவார். இவ்விருவரும் நன்கு தமிழ் பயின்றவர்கள். மருத்துவக்கலை, சோதிடக்கலை ஆகியவற்றிலும் வல்லவர்கள். அடிகளாசிரியர் இவர்கள் (தாய்மாமன்) வீட்டில் தங்கி, தமிழ்ப் பயிற்சியையும் வடமொழிப் பயிற்சியையும் பெற்றார்.

பெரம்பலூரில் வாழ்ந்த திரு. மருதநாடார் என்பவரிடம் சோதிடக் கலையைக் கற்றுக்கொண்டார். முசிறி அரசினர் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராய் இருந்த உயர்திரு. வீ. குமாரவீரையர் என்பவரிடம் நன்னூல் காண்டிகை உரையை மட்டும் முறைப்படி பாடங் கேட்டார். 1937-இல் இவர் தனியாகப் பயின்று சென்னைப் பல்கலைக்கழகத்தில் தேர்வெழுதித் தமிழ்ப் புலவர் பட்டத்தைப் பெற்றார்.

**மயிலம் கல்லூரியில் பணி**

14—7—1938-இல் மயிலம் திருமடத்தில் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி என்ற பெயரால் ஒருதமிழ்க் கல்லூரி தோன்றிற்று. அக்கல்லூரியில் இவர் முதலாசிரியராக அமர்ந்தார். அக்கல்லூரி பல்கலைக்கழக ஒப்புதல் பெற்றபின் 1—7—41 இலிருந்து 30—11—41 வரை விரிவுரையாளராகவும், 11—2—42 இலிருந்து 1—7—1950 வரை துணைத்தலைவராகவும் அங்குப் பணியாற்றினார்.

**கரந்தைத் தமிழ்க் கல்லூரிப் பணி:**

பின்னர் 3-7-1950 இலிருந்து 3-7-1970 வரை தஞ்சாவூர் கரந்தைப் புலவர் கல்லூரியில் விரிவுரையாளராகவும் துணை முதல்வராகவும் பணியாற்றினார். 4—4—70 இலிருந்து ஓய்வு பெற்றார்.

**ஒய்விற்குப் பின்:**

சேலம் மாவட்டம் ஆத்தூரில் அமைந்திருந்த தனியார் தமிழ்க் கல்லூரி ஒன்றில் முதல்வராக மூன்றாண்டுகள் பணியாற்றினார்.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் ஆராய்ச்சி யாளராக ஓராண்டு (1977) பணியாற்றினார்.

20—1—1982ஆம் நாளிலிருந்து 1—10—1985ஆம் நாள்வரை தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் சுவடிப் புலத்தில் சிறப்பு நிலை இணைப்பேராசிரியராக அமர்ந்து தொல்காப்பிய ஆராய்ச்சியைச் செய்து வந்தார். அதன்பின் மூப்பின் காரணமாகத் தமிழ்ப் பல்கலைக்கழகப் பணியிலிருந்து தாமே விலகிக் கொண்டார். மூப்பின் காரணமாகத் தமிழ்ப் பல்கலைக் கழகப் பணியிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்ட அவர் தம் இல்லத்திலிருந்து அப்பணியை (தொல்காப்பிய ஆய்வுப் பணியை) நிறைவு செய்து வழங்கினார்.

**குடும்பம்:**

இருந்தமிழே உன்னால் இருந்தேன் வானோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்

என்று தமிழுக்காக வாழ்ந்து வரும் பேராசிரியர் அடிகளாசிரியர் அவர்கள், தம் பிறந்த ஊரிலேயே பிறந்த கூரை வீட்டிலேயே மண் தரையில் இன்னமும் அமர்ந்து இந்த மண்ணோடு இருக்கும் பற்றை நிலைப்படுத்துவார்போல் வளங்குன்றிய வாழ்வே வாழ்ந்து வருகிறார். தமிழ்ப் பணிக்காகவே தம் பொருளாதாரத்தைச் செலவிட்டு வேண்டுமென்றே வளங் குன்றிய வாழ்வைத் தேடிக் கொண்டவராவார்.

அறிவுசான்ற மூன்று ஆண்மக்களும், அமைதி சான்ற மூன்று பெண்மக்களும் வாசுகி அனைய மனையாளுமே இவரது சொத்துக்களாக உள்ளனர். சிந்தனை செய்தே சிறந்த இவர் உடல் இன்று பலரின் சிந்தனைக்கு உரியதாக உள்ளது. எழுதி எழுதியே முதிர்ந்த இவரது கைகள் எழுத மறுக்கின்றன. நடந்தே சிறந்த கால்கள் நடை தடுமாறுகின்றன. ஆனால் சிந்தனை மட்டும் தடுமாறாமல் தமிழையே இன்றும் சிந்தித்துக் கொண்டிருக்கின்றது. அகவை (95) முதிர்ந்த நிலையில் எந்த ஆசையும் அற்று. தம் நூல்கள் அச்சேறி உலாவர வேண்டு மென்ற பற்று ஒன்றுடன் மட்டுமே இவர் வாழ்ந்து வருகிறார்.

## அடிகளாசிரியர் தமிழ்ப்பணி

**"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறு"**

என்ற திருமூலர் வாக்குப்படி அடிகளாசிரியர் இன்றளவும் தமது முதிர்ந்த வயதிலும் (95) தமிழ்ப்பணி செய்து வருகின்றார் ஏறத்தாழ முப்பத்தைந்து ஆண்டுகள் கல்லூரிகளில் தமிழ் கற்பிக்கும் பணியை இவர் ஆற்றி வந்தார். அன்றியும் இடையறாது உழைத்துத் தமிழில் நூல்கள் எழுதுவதிலும் ஈடுபட்டுள்ளார். இதுகாறும் இவர் உரைநூல்கள், பதிப்பு நூல்கள். ஆராய்ச்சி நூல்கள், படைப்பிலக்கிய நூல்கள் என்ற வகையில் 57 நூல்களைப் படைத்துள்ளார். அவை வருமாறு:

## அடிகளாசிரியர் படைப்புகள்

### 1. உரை நூல்கள்

அ) உரைப் பதிப்புகள் (உரையோடு விளங்கிய நூல்களைப் பதிப்பித்தல்)

1. அருணகிரி அந்தாதி–சரசுவதிமகால் வெளியீடு 1967
2. மருதூரந்தாதி உரை–சரசுவதி மகால் வெளியீடு 1968
3. காலச் சக்கரம்–சரசுவதி மகால் வெளியீடு (சோதிட நூல்) 1969-79
4. வராகர் ஓராசாத்திரம் (சோதிட நூல்) சரசுவதி மகால் வெளியீடு 1970-8-91
5. சிவஞான தீபம் உரை – சரசுவதி மகால் வெளியீடு 1970
6. சிவப்பிரகாச விகாசம் உரை–சரசுவதிமகால் வெளியீடு 1977

ஆ) உரைவரைவுகள் (தாமே உரை எழுதி வெளியிட்டவை)

7. முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் உரை 1938
8. சேக்கிழார் பிள்ளைத் தமிழ் உரை 1967
9. தமிழகக் கல்வெட்டு விளக்கவுரை (மு. கோவிந்தராசனாருடன் இணைந்து எழுதியவை) 1967-68
10. திருவலஞ்சுழி தேவாரப்பாடல்கள் உரை 1956
11. திருவாசகக் கோயில் திருப்பதிகம் உரை 1981
12. சிவபுராணச் சிற்றுரை 1986-99
13. சதமணிமாலை மூலமும் உரையும் 1990
14. சித்தாந்த சிகாமணி அங்கத்தலத் திரட்டு உரை 1992
15. ஸ்ரீமத் சிவஞான பாலயதேசிகர் திருப்பள்ளி எழுச்சி உரை 1993

16. குதம்பைச்சித்தர் பாடலும் உரையும் 1999
17. இட்டலிங்க அபிடேக மாலை மூலமும் உரையும் 2001
18 சசிவன்ன போதம் மூலமும் உரையும் 2002

## 2. பதிப்பு நூல்கள்

(ஓலைச் சுவடிகளிலிருந்து பதிப்பித்தவை)

19. பஞ்சதிகார விளக்கம் மூலமும் உறையும் 2003
20. வீரசைவப் பிரமாணம் 1936
21. சதமணிமாலை (மூலம் மட்டும்) 1938
22. சிவப்பிரகாச விகாசம் (மூலம் மட்டும்) 1939
23. காமநாதர் கோவை 1957
24. மேன்மைப் பதிகம் 1957
25. சதுர்லிங்க தசகோத்திர சதகம் 1958

## 3. ஆராய்ச்சி நூல்கள்

26. தொல்காப்பியம்-எழுத்து-இளம்பூரணம் (அரிய ஆராய்ச்சிப் பதிப்பு) 1966
27. 'ஐவகையடியும்' என்னும் தொல்காப்பிய நூற்பா விளக்கம் (சென்னைப்பல்கலைக்கழகம்) 1977
28. தமிழ் இலக்கண இலக்கியங்களில் சைவசித்தாந்தம் 1978
29. தொல்காப்பியம் – சொல் – இளம்பூரணம் (தமிழ்ப் பல்கலைக்கழகம்) 1990
30 தொல்காப்பியம் – பொருள் – செய்யுளியல் (தமிழ்ப் பல்கலைக்கழகம்) 1985
31. தொல்காப்பியம்–பொருள் எட்டு இயல் மட்டும் (தமிழ்ப் பல்கலைக்கழகம்) (அச்சில்)

## 4. படைப்பிலக்கிய நூல்கள்

அ) **செய்யுள் வடிவம்:**

32. பிள்ளைப்பாட்டு 1945
33. திருஅரசிலிக் காதை 1948
34. குழந்தை இலக்கியம் 1963
35. சான்றாண்மை (கோப்பெருஞ்சோழன்பற்றியது) 1964–1975
36. சென்னிமலை முருகன் தோத்திரம் 1980
37. அரசியல் இயக்கம் 1981
38. பல்சுவைப் பண்ணத்திப் பாடல்கள் (குழந்தை இலக்கியம்) 1983
39. அருள்திரு மாரியம்மன் திருப்பதிகம் 1984
40. உளத்தூய்மை 1984-94

41. தண்ணிழல் (திருமுடிக்காரியைப் பற்றிய அரிய இலக்கியம்) 1990
42. மறவர் நத்தக்குன்றமரும் திருமுருகன் 1993
43. தொழிலியல் 1993
44. மெய்ப்பொருட் காதை (மெய்ப்பொருள் நாயனார் வரலாறு)
45. தமிழ் மாண்பும் தமிழ்த் தொண்டும் (தமிழியக்க வெளியீடு) 1996
46 ஒன்பான்கோள் வணக்கப்பாடல்கள் (தமிழியக்க வெளியீடு) 1996
47. சிறுவர் இலக்கியம் 2093-04

ஆ) உரைநடை

48. எங்களூர் 1937
49. தொடக்கப்பள்ளி - நாடகம்
50. வீரசைவ சிவ பூஜாவீதி 1949
51. விலையேற்றமும் வாழும் வழியும் 1984
52. திருமூலரும் பேருரையும் (தமிழக அரசின் முதற்பரிசு பெற்ற நூல்) 1998
53. காயத்துள் நின்ற கடவுள் 1999
54. திருவாசக அநுபூதி 2000
55. கீதையின் அறிவுப் பொருள் 2000
26. திருமந்திர உணர்வு 2001
57. தொல்காப்பியச் செய்யுளியல்-உரைநடை (அச்சில்)

## பொருள் முட்டுப்பாட்டினால் முடங்கிக் கிடக்கும் அச்சேறா நூல்கள்

1. கலித்தொகை உரை (குறிஞ்சிக் கலி)
2. பிரபுலிங்கலீலை உரை
3. அடிகளாசிரியரின் சமுதாயப் பாடல்கள்
4. அடிகளாசிரியரின் இலக்கணக் கட்டுரைகள்
5. அடிகளாசிரியரின் இலக்கியக் கட்டுரைகள்
6. திருக்குறள் உரை (133 குறள் வரை)
7. முப்பால் – உரைநடை
8. சிவஞான பாலைய சுவாமிகள் கலம்பகம் மூலமும் உரையும்

# பேராசியர் திரு. அடிகளாசிரியரைப் பற்றிய அரிய செய்திகள்

1. இவரின் இயற்பெயர் குருசாமி. இவர் மறைமலை அடிகளாரின் தொடர்பால் தம்பெயரை 'அடிகளாசிரியர்' என்று மாற்றிக் கொண்டார். மேலும் இவர் வீரசைவ ஆசிரியப் பரம்பரையினர் என்பதால் 'திரு' என்ற சொல்லை 'ஸ்ரீலஸ்ரீ என்று சொல்லிற்குப் பதிலாகச் சேர்த்து திரு. அடிகளாசிரியர் என்ற அழைக்கப்படுகின்றார்.

2. திரு அடிகளாசிரியர், குகையூர் திருமூல சித்திநாதேச்சுர ஆதீனத் தலைவராக (குருவாக) அமர்ந்து அருளாட்சியும் செய்து வருகின்றார் இவ்வாதீனத்தில் எக்காலத்திலும் 'சிவம்' விளங்க வேண்டும்; மேலும் எல்லோரும் வந்து போகின்ற, ஒன்று படுகின்ற ஞானநூல் நிலையமாகவும் இது இருத்தல் வேண்டும் என்பது இவரது குறிக்கோளாகும். இதற்காகவே இவர் பல ஆன்மீக நூல்களை எழுதி நல்ல பல சீடர்களை உருவாக்கி வருகின்றார்.

3. தமிழோடு தன்னைக் கரைத்துக் கொண்ட அடிகளாசிரியர் மயிலம். கரந்தை ஆகிய இடங்களில் அமைந்துள்ள கல்லூரிகளில் பேராசிரியராகவும், முதல்வராகவும் பணியாற்றிய பெருமையர். சென்னை, தஞ்சைப் பல்கலைக் கழகங்களின் ஆய்வுப் பணியில் முத்திரைப் பதித்த வித்தகர்

4. செய்யுள், உரைநடை, புத்துரை, பதிப்பு, ஆராய்ச்சி என்ற வகையில் 57 நூல்களைத் தந்து தமிழுக்கு வளம் சேர்த்த 95 வயது பேராசான் இவரே ஆவார். இவரது வீடும் (வைக்கோல் வேய்ந்த மிகப்பழைய கூரை வீடு) வளமாயில்லை உடலும் நலமாயில்லை ஆனால் தள்ளாத வயதிலும் தமிழை ஆய்ந்து தமிழுக்காகவே வாழ்ந்து தமிழை வளப்படுத்தி வருகின்றார்.

# பேராசிரியர் திரு. அடிகளாசிரியர் பெற்ற பாராட்டுக்கள்

1. 1967 ஆம் ஆண்டு இராசபாளையம் மணிமேகலை மன்றத்தார் நிகழ்த்திய தொல்காப்பியம் இரு சூத்திர விளக்கக் கட்டுரைப் போட்டியில் கலந்து கொண்டு முதற்பரிசு பெற்றுள்ளார்.

2. கோயம்புத்தூர் மாவட்டம் பேரூர் மடாலயத்தைச் சேர்ந்த தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள் இவரைப் பேரூர் ஆதீனப் புலவராக்கிச் 'செந்நாப்புலவர்' என்ற பட்டத்தை வழங்கியுள்ளனர் (28-2-72)

3. விழுப்புரம் மாவட்டம் கல்லக்குறிச்சி தமிழ்க் கவிஞர் மன்றத்தினர் இவருடைய தொல்காப்பியம் எழுத்ததிகாரப் பதிப்பினைப் பாராட்டி, பொன்னாடைப் போர்த்திப் பாராட்டுப் பத்திரம் வழங்கியுள்ளனர்.

4. தஞ்சாவூர் கரந்தை மீனாட்சியம்மன் திருக்கோவிலில் முறையாகச் சைவசித்தாந்த நூல்களைப் பாடம் சொன்னதால் அக்கோயில் சைவ பிரச்சார சபையினரால் பாராட்டப் பெற்றுள்ளார்.

5. தமிழ்மொழிக்கு எண்ணிறந்த சேவைகளைப் பல்லாண்டுக்காலம் சலியாது செய்து வருகின்றமையால் திருக்கோவிலூர் பண்பாட்டுக் கழகம் 1992 ஆம் ஆண்டிற்குரிய கபிலர் விருதை இவருக்கு வழங்கிச் சிறப்பித்துள்ளது.

6. சென்னைக் கம்பன் கழகத்தினர் இவருடைய தமிழ்ப் பணியைப் பாராட்டிச் சான்றிதழும் பணமுடிப்பும் வழங்கினர் (7-8-1992)

7. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இவருடைய தொல் காப்பியப் பணியைப் பாராட்டி இவருக்குத் 'தொல்காப்பியச் செம்மல்' என்ற பட்டத்தை வழங்கியுள்ளது (4-6-1997)

8. கும்பகோணம் வீரசைவப் பெரியமடம் இவருக்கு 'வீரசைவக்காவலர் என்ற பட்டத்தை வழங்கியுள்ளது.

9 மயிலம் பொம்மபுர ஆதீனம் இவருக்கு, "கற்பனைக் களஞ்சியநம்பி" என்ற பட்டத்தை வழங்கியுள்ளது. (12-10-1998)

10. தமிழக அரசின் தமிழ்வளர்ச்சித்துறை இவரெழுதிய, "திருமூலரும் பேருரையும் என்ற ஆய்வு நூலை 1998 ஆம் ஆண்டில் வெளிவந்த நூல்களுள் சிறந்த நூலாகக் கருதி ரூபாய் பத்தாயிரத்தை வழங்கிச் சிறப்பித்துள்ளது. (15—1—2000)


11. சென்னையைச் சேர்ந்த சேக்கிழார் ஆய்வு மையத்தினர் இவரது தமிழ்ப் பணியைப் பாராட்டி, "சேக்கிழார் விருதையும்" நினைவுப் பரிசாக ரூபாய் பத்தாயிரத்தையும் வழங்கிச் சிறப்பித்துள்ளனர். (27-07-2001)

12. தஞ்சாவூர் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினர் மேன்மை தங்கிய தமிழவேள் த. வே உமாமகேசுவரம் பிள்ளைப்பெயரில் விருது வழங்கிச் சிறப்பித்தனர் (9-1-2002)

13. காஞ்சிபுரம் ஸ்ரீ சங்கர மடம் இவருடைய சைவப் பணியைப் பாராட்டிக் கௌரவித்து, இவருக்குப் பத்தாயிரம் பொற்கிழி வழங்கிச் சிறப்பித்தது. (18—1—04)

# சிறுவர் இலக்கியம்

ஆசிரியர் : திரு. அடிகளாசிரியர்
பதிப்பாசிரியர் : அ. சிவபெருமான்



திரு. அடிகளாசிரியர்

திருவருள் நிலைய வெளியீட்டகம்
குகையூர் - அஞ்சல்
கல்லக்குறிச்சி வட்டம்